# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,854 — 1969 මැයි 15 වැනි බ්‍රහස්පතින්දා — 1969.5.15**

14,854 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 505 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 539 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 530 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 534 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | 541 |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியினும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக் கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத் தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனை யில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/ சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதி லிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொரு வரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறை யில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படை களில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனு மதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திக திக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர் கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியான தாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ் வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரி னால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப் பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச் சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள் ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங் களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக் கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்தி கள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்த வோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆத ரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகை மையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழை யான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட் டால் தெரிவு-செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலி யவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. : AA 44/X 2085/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர்—II ந் தரம்**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர், II ந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.5.30.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.6.

குறிப்புகள்.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரி யிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட் சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல், வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத் திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அர சாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண் ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப் பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத் தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடைய வர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்து வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்து வச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம் பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 4,080—360—ரூபா 8,400 வருடாந்தம்.

குறிப்பு.—(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற பட்டப் பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) ஓர் ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில் நுட்ப நிலையம் அல்லது சிரேட்ட தொழில் நுட்ப நிலையம் இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி அல்லது சமனுன அல்லது உயர்ந்த தரத்தைய அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 வழங்கப்படுதற்குச் சீர்தூக்கப்படுவார்கள்.

(iii) இலண்டன் குடிசார் எந்திரவியல் அல்லது மின்சார எந்திரவியல் அல்லது பொறிமுறை எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமை போன்ற பூரண தொழிற் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,320 பெறுதற்கு உரித்துடையவராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள், அவர்களுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியை—அதாவது வருடாந்தச் சம்பளம் ரூ. 8,400 ஐ அடைந்து அச்சம்பளப்படியில் ஒரு வருடம் கடமை புரிந்த பின், வருடாந்தம் ரூ. 480 சம்பள உயர்ச்சிப் பணமாகப் பெற்று வருடாந்தம் ரூ. 10,800 வரை சம்பளம் பெறலாம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969.5.30 ஆந் திகதியன்று 21 வயதுக்குட்படாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் குடிசார் எந்திரவியல் பாடங்களுடன் எந்திரவியல் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) இலண்டன் குடிசார் எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவன தகைமைப் பரீட்சையின் I ஆம், II ஆம் பகுதிகளில் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ மே ௴ 7 ந் உ.

5-475/1—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

இல. : AA 42/X 2086/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : மின்சார எந்திரவியல், II ந் தர விரிவுரையாளர்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் மின்சார எந்திரவியல் விரிவுரையாளர், II ந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.5.30.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.6.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரி யிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு ஏதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத் திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :

ரூ. 4,080 — 360 — ரூ. 8,400 வருடாந்தம்.

**குறிப்பு.**—(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) ஓர் ஆசிரியர் கலாசாலை அல்லது ஒரு சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது சமனான அல்லது உயர்ந்த தரத்தய அங்கீகரிக்கப் பட்ட ஒரு நிலையத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 வழங்கப்படுதற்குச் சீர்தூக்கப்படுவார்கள்.

(iii) இலண்டன் குடிசார் எந்திரவியல் அல்லது மின்சார எந்திரவியல் அல்லது பொறிமுறை எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமை போன்ற பூரண உயர் தொழில் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,320 பெறுதற்கு உரித்துடையவராவர், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள், அவர்களுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியை—அதாவது வருடாந்தச் சம்பளம் ரூ. 8,400 ஐ அடைந்து அச்சம்பளப் படியில் ஒரு வருடம் கடமை புரிந்தபின் வருடாந்தம் ரூ. 480 சம்பள உயர்ச்சிப் பணமாகப் பெற்று வருடாந்தம் ரூ. 10,800 வரும்வரை சம்பளம் பெறலாம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர்கள் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும்:—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான முதுமாணி எந்திரவியல் பட்டம், மின்சார எந்திரவியல் பாடங்களுடன், பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) மின்சார எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமைப் பரீட்சாயின் I, II, III ஆம் பகுதிகளில் தேறியிருக்க வேண்டும்.

அல்லது

(iii) சமனான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது நியமனத்திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு** —(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 7 ந் வ.

5–475/2—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

இல. : AB 37/X 2087/69.

## திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலுள்ள திட்டமிடல் உத்தியோகத்தர்கள் பதவி

திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலுள்ள திட்டமிடல் உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.5.30.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.6.

**குறிப்பு.**—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பளத்துக்குரிமையுடையவையுமாகும். தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் மூன்றாண்டுக் காலம் தகுதி காண் நிலையிலிருப்பார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

இப்பதவிக்குரிய சம்பளம் ஆண்டுக்கு ரூபா 4,800 ஆகத் தொடங்கி, ரூபா 360 இல் பத்தும் ரூபா 480 இல் பத்தும் ஆண்டு ஏற்றங்களாகக் கொண்டு, ரூபா 11,280 இல் ஈராண்டு தங்கி நின்று ரூபா 13,200 வரை செல்லும் ; 8,400 ரூபாவுக்கும் 11,760 ரூபாவுக்கும் முன் வினைத்திறமை காண் தடைகளுண்டு.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.5.30 ஆந் தேதி அன்று இருபத்திரண்டு வயதுக்குக் குறையாதவராயும் முப்பத்தைந்து வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கெனவே நிரந்தர நியமனங்கள் பெற்றிருப்போரின் வயதெல்லைகள் கவனிக்கப்படமாட்டா).

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பொருளியல், வணிகவியல், புள்ளிவிவரவியல், கணிதம், புவியியல், விவசாய பொருளியல், சமூகவியல் ஆகிய பாடங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு (ஒனர்ஸ்) பட்டம் பெற்றவராய், அல்லது மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஒன்றில் மேற்பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும். முதலியன.

**குறிப்பு.**—எந்திரவியல், விவசாயம் அல்லது வேறு ஏதாவதொரு விஞ்ஞானப் பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு (ஒனர்ஸ்) பட்டம் பெற்றவராய் அல்லது கலை அல்லது விஞ்ஞானத்தில் முதலாம் வகுப்பு சிறப்பு (ஒனர்ஸ்) பட்டம் பெற்று திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான தேர்ச்சியடைவதற்காகத் தகுந்த முறையில் பயிற்சி பெற விருப்பமுடையோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்போது, சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய தேதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் தேதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
1969 ம் ஆண்டு மே மீ 7 ந் வ.

5-475/3--15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

இல. வெ. மு/4/73.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மலேசியாவில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள், 1970

பின்வரும் துறைகளிலான பட்டப்பின் படிப்புகளுக்கு அல்லது ஆராய்ச்சி வேலைகளுக்கு, 1970 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் பொது நலவரசுப் புலமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் மலேசியா அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

கலைகள்,
விஞ்ஞானம்,
மருத்துவம்,
விவசாயம்,
எந்திரவியல்,
பொருளியலும் நிர்வாகமும்,
கல்வி.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப் புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்களின் கால எல்லை சாதாரணமாக இரண்டு வருடங்களாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு மலேசியா அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்,

(ii) 1.1.1970 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்,

(iii) விரும்பும் பாடநெறிக்குப் பொருத்தமான துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் II ஆம் வகுப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் (பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா),

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பாடுகளை 1.1.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2. தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனல் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) மலேசியன் தொடர்புக் குழுவால் ஒழுங்குபடுத்துவதற்கமைய மலேசியாவுக்குப் போய்த்திரும்புவதற்கான ஆகக் கிட்டிய மார்க்கத்தால் கடல் மூலம் அல்லது விமான மூலம் சுற்றுப் பயணத் தார் வகுப்புப் பிரயாணம் (புலமைப் பரிசில் பெற்றுச் செல்பவருடன் செல்லும் மனைவி தவிர்ந்த அவரில் தங்கியிருக்கும் வேறெவருடைய செலவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டில்லை).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கற்கை, ஆய்கூட, பரீட்சை கட்டணங்கள்,

(இ) மாதாந்தம் கொடுபடும் சொந்தத் தாபரிப்புச்சகாயப்படி ; இது வருடாந்தம் M$ 6,000 வீதமாகும்,

(ஈ) வருடாந்தம் M$ 150 பெறுமதியான புத்தக அல்லது உபகரண கொடை ,

(உ) மலேசியாவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பிரயாணத்திற்கென வருடாந்தம் M$ 200 வரையான கொடை,

(ஊ) புலமைப் பரிசில் பெற்றுச் செல்லும் விவாகம் செய்த ஆண் ஒரு வருடன் அவருடைய மனைவியும் செல்லுமிடத்து வருடாந்தம் M$ 1,200 வீதம் மேலதிக விவாகச் சகாயப்படி. புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்கும் நேரம் விவாகம் செய்திராவிடின் புலமைப் பரிசில் செல்லுபடியான முதல் வருடம் இச்சகாயப்படி வழங்கப்படமாட்டாது, மனைவியும் ஒரு புலமைப் பரிசில் பெற்று செல்லுமிடத்து அல்லது மலேசியாவில் வேதனம் பெறும் உத்தியோகத்தில் இருப்பினும் இச்சகாயப் படி வழங்கப்படமாட்டாது.

(எ) பின்வருவனவை தவிர அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைச் செலவுகள் :—

(i) செவிப்புல துணைச்சாதனங்கள்,

(ii) மூக்குக் கண்ணாடி,

(iii) எவ்வித பற்சிகிச்சையும்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல் காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், மலேசியா வுக்கு செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவா சமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத் துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங் கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் மலேசியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையவராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக் கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படு தற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத் துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படு வார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நிய மனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமை யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத் தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவலகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதி யான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக் கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல் கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படு வார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப் பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரி சிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவ றும் விண்ணப்பதாரி, தனது உரிமை சேர் தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தர காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1969 ம் ஆண்டு மே மீ 7 ந் உ.

5–490—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## உள்ளூராட்சி அமைச்சு

### சனசமூக நிலைய (தற்காலிக) மேற்பார்வையாளர் பதவி

உள்ளூராட்சி அமைச்சு சனசமூக நிலையங்களில் 22 மேற் பார்வையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்தில் 1969, யூன் 1 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்குக் கிடைக் கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

1. **நிபந்தனைகளும் நியமன நியதிகளும் :**

(1) இப்பதவி தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம் பளம் அற்றதுமாகும். தெரிவு செய்யப்பட்ட அபேட் சகர்கள் அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவு தொகை செலுத்தவேண்டும்.

(2) அபேட்சகர் அரசாங்க மொழிக்கொள்கைக்குப் புதிய வராக இருந்தால்,

(அ) 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்திற்கும் இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட் டங்களுக்கும் விதிகளுக்கும் அமைந்து ஒழு குவரென்னும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

(ஆ) சிங்களத் தேர்ச்சியான 1, 2, 3 ஆம் தரப் பரீட்சையில் முறையே அவர் நியமிக்கப் பட்ட 1, 2, 3 ஆம் வருடங்களில் சித்தி அடையாவிட்டால் அவர் சேவையில் இருந்து நீக்கப்படத் தகுதி உடையவராவர். அவருக்கு விதிக்கப்பட்ட பரீட்சையில் குறிப்பிட்ட காலத்திற்குள் சித்தி எய்தா விட்டால் அவருடைய சம்பள உயர்ச்சிகள் இடைநிறுத்தம் செய்யப்படும், மேலும் ஆறு மாத காலத்திற்குள் சித்தி அடையாவிட் டால், இடைநிறுத்தம் பரீட்சையிற் சித்தி யெய்தும்வரை நிறுத்திவைக்கப்படும் அல் லது சேவையில் இருந்து நீக்கப்படுவர். மூன்று ஆண்டுகளுக்குப் பின் வெற்றிகர மாக அவரது சேவையின் தொடர்ச்சியானது 3 ஆம் தரப் பரீட்சையில் அவரது சித்தி யைப் பொறுத்ததாகும். எனினும் பரீட்சை யில் அவரது சித்தியெய்தல் அவரது சேவை நிரந்தரமாக்கப்படவேண்டும் என்பதையே குறிக்கவேண்டும் என்பதல்ல.

(மேலுள்ள (ஆ) பந்தி சிங்கள மொழிமூலம் சேவையிற் சேர்ந்தோருக்குப் பொருந் தாது.)

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் தற் போது அரசாங்க சேவையில் நிரந்தரமான வர்களெனின் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நியமனம் செய்யப்படுவர்.

2. **சம்பளம் :**

ஆண்டொன்றிற்கு இப்பதவிக்குரிய சம்பளமான 1,620 ரூபாவுடன் 3,780 ரூபாவரை உயர்ந்து செல்லக்கூடிய 120 ரூபா கொண்ட 18 வருட உயர்வுகளை உடையது. 2,460 ரூபாவில் திறமைத் தடை பரீட்சையும் உண்டு.

3. தகைமைகள் :

எல்லா அபேட்சகர்களும் பின்வரும் தகுதியான சான்றுகளைக் காட்டல் வேண்டும் :

(1) 1969 யூன் 1 ஆம் திகதி 22 வயதிற்கு மேற்பட்டவராகவும் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருந்தல் வேண்டும். தற்பொழுது நிரந்தரமான அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது.

(2) (அ) பின்வரும் பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமையாகச் சித்தி எய்திய சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரத்தை உடையவராகவும் ;

1. சிங்களப் பாஷை/தமிழ்ப் பாஷை

2. எண்கணிதம்/தூய கணிதம்/வர்த்தககணிதம்

3. குடியியல்

அல்லது

(ஆ) பொதுக் கல்வித் தராதரம் சாதாரணப் பரீட்சையில் ஆறு பாடங்களில் ஒரே தரத்தில் பின்வரும் பாடங்கள் உட்பட 5 பாடங்களிற் திறமைச் சித்தி அடைந்தவராகவும் ;

1. சிங்களப் பாஷை/தமிழ்ப் பாஷை

2. எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தககணிதம்

3. குடியியல்

அல்லது,

(இ) வேறு ஏதாவது உயர்ந்த தகைமைகள்.

(3) சிங்களம் அல்லது தமிழில் கூட்டங்கள் ஏற்பாடு செய்து நடத்தத் தகுதி உடையவராக இருந்தல் வேண்டும்.

(4) விளையாட்டு, சங்கீதம், நாடகம் கலை முயற்சிகளில் அனுபவமும் ஊக்கமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(5) உடல் நலமும், போற்றத்தக்க பண்புச் சான்றிதழையும் உடையவராகவும் இருத்தல் வேண்டும.

4. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) இணைத்தல் வேண்டும்.

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் அல்லது பதிவாளரால் இது சம்பந்தமாக வழங்கப்பட்ட ஆதாரம்.

(2) கல்விச் சான்றிதழ்

(3) இப்பதவிக்கு நியமிக்கக்கூடிய தகுதியையும் பண்பையும் கூறும் அண்மையிற் பெற்ற நற்சான்றிதழ்கள்.

5. அரசாங்கசேவையில் உள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரால் விதிக்கப்பட்ட திகதிக்குமுன் பெற்றுக்கொள்ளப் பட்டதெனவும் தாமதத்திற்குப் போதிய காரணம் காட்டி அவற்றை ஏற்குமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகள் கொழும்பு 1 ஹேமாஸ் கட்டிடத்தில் உள்ள உள்ளூராட்சி அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு அனுப்பப்படவேண்டும். அவை இப்பகுதியில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் பெயர் குறிப்பிட்டு அனுப்பக் கூடாது.

7. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம் 2 ஆம் பிரிவில் வெளியிடப் பட்டுள்ளதைப் பார்க்க.

டபிள்யூ. பத்மநாதன்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்.
(நிதியும் தாபனமும்)

உள்ளூராட்சி அமைச்சு,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
6 மே மாதம், 1969.

விண்ணப்பப்படிவம்

சனசமூக நிலைய (தற்காலிக) மேற்பார்வையாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
(பெரிய தனி எழுத்தில்)
சொந்தப் பெயர் :————.
மற்றப் பெயர்கள் :————.

2. முகவரி :————.

3. குடியுரிமையும் எவ்வாறு பெறப்பட்டது என்பதும் : ————.
(பரம்பரையினலா அல்லது பதிவினலா)

4. (1) பிறந்த திகதி :————.
1969, யூன் 1 ஆம் திகதியில் வயது :————.
(2) விவாகமானவரா அல்லது தனிப்பட்டவரா :——

5. பிறந்த இடம் :————.
(1) விண்ணப்பதாரரின் :————.
(2) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழிப்பாட்டன் :——

6. உயர்ந்த கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

7. பாடசாலை விட்டநாள்முதல் பார்த்த தொழிலும் சேவை நியதிகளும் :————.

8. விளையாட்டு, சங்கீதம், நாடகம், கலை சம்பந்தமான தொழிற்பாட்டில் உள்ள அறிவும் அனுபவமும் :————.

9. சிங்களத்திலும் தமிழிலும் கூட்டங்கள் நடத்தக்கூடிய ஆற்றல் :————.

10. வேறு விசேட தகைமைகள் :————.

11. நற்சாட்சிப்பத்திரம் வழங்கியவர்களின் பெயர், முகவரி, தொழில் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னுற் காட்டப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன். இதிற் காணப்படும் விபரங்களில் எதுவும் பொய்யானதென்றே தவறானதென்றே தேர்வுக்குமுன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்குப் பாத்திரவாளியாவேன் என்பதையும் நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடு எதுவுமின்றி வேலையினின்று நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

5-380—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

### இயக்கப்பட உதவி இயக்குநர் பதவி

கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இயக்கப்பட உதவி இயக்குநர் பதவிகளுக்கு, கீழே விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் திருப்தி செய்வோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரச் செயலாளர் (பொது நிருவாகக் கிளை) கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்றது மாகும். அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசகரும மொழிக் கொள்கைக்கிணங்க அரசினர் சேவைக்குப் புதிய முறைப்படி சேர்க்கப்படுபவராயின் தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்;

(iii) அரசினர் சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படின் நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் நியமனமாக அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும்;

(iv) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரியவேண்டும்;

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை மூலமாகும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 660—12 × 30—1 × 18—1,038 ஆகும். சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆதியன அரசினர் விதிகளின் பிரகாரம் கொடுபடும்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்திலேனும் இவ்வமைச்சின் கீழுள்ள எத்திணைக்களத்திலேனும் வேலை செய்பவராக.

**குறிப்பு.**—சமயோசித வேலையாளராகக் குறைந்தபட்சம் ஆறு மாத திருப்திகரமான சேவை பூர்த்தி செய்திருப்பவர்களின் விண்ணப்பங்களும் சீர்தூக்கப்படும்.

(ஆ) 18 வயதுக்குக் குறையாதவராயும் 25 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்,

(ஈ) (i) சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தியிருக்க வேண்டும்,

(ii) 16 மி. மீ. அல்லது 35 மி. மீ., ஜி. பீ., உம் டீ றை அல்லது பெல் உம் ஹௌவெல் உம் ஒலி சலனப்பட பிம்ப வீழ்த்திகள் (16 mm. or 35 mm. G. B. & De Vry or Bell & Howell) இயக்குவதில் குறைந்தபட்சம் 1 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(i) சிங்களத்தில், தமிழில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் 6 ஆந் தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்,

(ii) 16 மி. மீ. அல்லது 35 மி. மீ., ஜி. பீ., உம் டீ றை அல்லது பெல் உம் ஹௌவெல் உம் ஒலி சலனப்பட பிம்ப வீழ்த்திகள் இயக்குவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம்;

(ஆ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமை பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்;

(இ) சலனப்பட பிம்பவீழ்த்திகள் இயக்கும் அனுபவத்துக்கான அத்தாட்சிப் பத்திரம்;

(ஈ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (II) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் அபேட்சகர்கள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் மகா வித்தியாதிபதிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ் வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரச் செயலாளர்.

எண் : பொ. நி/30/219,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இயக்கப்பட உதவி இயக்குநர் பதவிக்கான விண்ணப்பம்**

(தொடரெண் : பொ. நி/30/219)

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.
2. நிரந்தர விலாசம் : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————.
   பிறந்த திகதி : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் —
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா ? : ————.
7. கல்வித் தகைமைகள் —
   (i) பொது : ————.
   (ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் : ————.
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை : ————.
8. அறிவித்தலின் 4 (ஈ) (ii) இல் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு : ————.
12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின் —
    (அ) படைக்கூற்றின் பெயர் : ————.
    (ஆ) வகித்த பதவி : ————.
    (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.
14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம்—
    (i) வகித்த பதவி : ————.
    (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
    (iii) விலகியதற்கான காரணம் : ————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

16. தற்போதைய உத்தியோகம் —

நிலையம் : ————.

(i) பதவிப் பெயரும் தரமும் : ————.

(ii) நியமனத் திகதி : ————.

(iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா ? : ———— —.

(iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.

(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ் விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி./30/219

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின்முன்/* பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

....................இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/* பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————.
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் :————.

திகதி : ————.

* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

5–488—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854.

---

எஸ். எச். 86/67.

## பொலிசுப் பகுதி

### பொலிசு கொஸ்தாப்பு உத்தியோகம்

பொலிசுச் சேவையில் பொலிசு கொஸ்தாப்பு உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தில் விண்ணப்பங்களை நிரப்பி அவற்றை "அதிபர்", பொலிசுப் பயிற்சிப் பாடசாலை, எச்செலன்ஸ் சதுக்கம், கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு 1.7.69 குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையில் இடதுபக்கத்தின் மேற்பாகத்தில் "பொலிசு கொஸ்தாபல் விண்ணப்பம்" என்று எழுதப்பட வேண்டும். பொலிசுப் பாடசாலையில் விண்ணப்பப் பத்திரங்கள் கொடுக்கப்பட மாட்டாது.

3. **சம்பள விகிதங்கள்.**—நியமனங்கள் செய்யப்பட்டதும் முதல் வருடம் ரூ. 750. ஒரு வருடத்திற்குப்பின் ரூ. 840 ஒவ்வொன்றும் ரூ. 42 வீதம் 22 வருடாந்த சம்பள உயர்வுப் பணங்களாக வருடமொன்றுக்கு ரூ. 1,764.

ரூ. 1,050, ரூ. 1,260, ரூ. 1,470, ரூ. 1,638 வேதனத்தை அடையமுன் கடப்புப் படிகள் உண்டு.

4. **தேவைப்படும் யோக்கியதாம்சங்கள்.**—

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் 1.7.69 ல் 18 வயதிற்கு குறையாமலும் 25 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினருக்கும், பிரித்தானிய தளங்களின் மாஜி உத்தியோகத்தர்களுக்கும், திறைசேரி 427 ம் 434 சுற்றறிக்கையின் படி சலுகையளிக்கப்படும்.

(ஆ) **கல்வி.**—வித்தியா பகுதியினரால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ம் தரம் அல்லது கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(இ) **உடல் அமைப்பு.**—(அ) உயரம் 5' 4" (குறைந்தது),
(ஆ) மார்பு 31" (இயற்கையான சுவாசம் விட்டநிலை)

(ஈ) **பிரத்தியேகமான யோக்கியதாம்சங்கள்.**—விண்ணப்பகாரர்கள் விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். (மாஜி இராணுவத்தினருக்கும் மாஜி பிரித்தானிய தளங்களில் உத்தியோகம் வகித்தவர்களும் இதற்கு விதிவிலக்கு).

(உ) விண்ணப்பதாரிகள் நியமனத்திற்கு முன் வைத்திய பரிசோதனையில் தகுதியுடையவர்களாகக் காணப்படவேண்டும்.

(ஊ) **கண்பார்வை.**—பார்வை ஒரு கண்ணால் 6/12 க்கு குறைவு இல்லாமல் இருக்க வேண்டும். ஒரு கண் பார்வை 6/6 ஆயின் அடுத்த கண்ணால் 6/18 பார்வை இருத்தல் வேண்டும். கண்ணுக்கு கண்ணாடிபோட்டுப் பாவிப்பவர்களுக்கு இடம் அளிக்கப்படமாட்டாது.

குறிப்பு.—ஒரு விண்ணப்பகாரர் குறித்த உயரம், மார்பு அளவு ஆகியவற்றில் சிறிது குறைவாக இருந்தாலும் அவர் விளையாட்டுத் துறையில் அதிக திறமைகாட்டியும், அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளிலோ அல்லது வெளிநாட்டில் இலங்கை விளையாட்டுப் பிரதிநிதியாக தேர்ந்து எடுக்கப்பட்டவராயிருந்தால் இவருடைய விண்ணப்பம், மற்றும் குறிக்கப்பட்டுள்ள தேவைகள் பூரணமாக இருந்தால் கவனிக்கப்படும்.

5. **நியமன விதிகள்.**—இந் நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையனவையுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் பொலிசு இதர நிதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்.**—

(அ) நியமனங்கள் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் சேவையில் நியமிக்கப்படும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அனுசரணையில் கொண்டு வருவதற்கு இது சம்பந்தமாக ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் இனிமேல் செய்யப்படக்கூடியதுமான சகல விதிகளுக்கும் பிரத்தியேகமாக 1956 ம் ஆண்டில் 33 ம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட விதிகளை நடைமுறையில் கைக்கொண்டு அவைகளுக்கு அமைந்து இணங்கி ஒழுகுமாறு யாவரும் வேண்டப்படுவர்.

(இ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பகிரங்க சேவைக் குழுவினரின் சட்டப் பிரமாணங்களுக்கும் நிதி ஒழுங்குமுறைகளுக்கும் ஒழுங்கு நூலின் பிரமாணங்களுக்கும் பொலிசுப் பிரதம அதிகாரியினால் அன்றேல் அரசாங்கத்தினரால் அவ்வப்போது அனுசரணையில் கொண்டுவரப்படும் நடைமுறைகளுக்கும் அடங்கி நடத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு சேவையாளரும் தகுதிகாண் சேவைக் காலத்தில் இலாகாவினால் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் சித்தியடையாதவர்களையும் பொலிசு இலாக்காவில் கடமையாற்றத் தகுதியற்றவர்களும் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(உ) விண்ணப்பதாரிகள் நியமனங்களில் உறுதிப்படும் வரை விவாகம் செய்ய இயலாதிருப்பினும் இரண்டு வருட திருப்திகரமான சேவைக்குப்பின் விவாகம் செய்ய விரும்புவோரின் மனுக்களைப் பொலிசுப் பிரதம அதிகாரியினால் பரிசீலனை செய்து அனுமதி அளிக்கப்படும்.

7. வர்த்தமானப் பத்திரிகை ஆரம்பப் பாகம் 1 ம் பகுதியில் 2 ம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள பொதுச் சேவைப் பதவிக்கான பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

8. விண்ணப்பதாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் பின் வருவனவற்றின் பிரதிகள் அனுப்பவேண்டும்:—

(அ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ;

(ஆ) அண்மையில் வழங்கப்பெற்ற இரண்டு ஒழுங்குச் சான்று பத்திரங்கள் ;

(இ) கல்வித் தகைமைச் சான்றுப் பத்திரங்கள்.

9. குறித்த திகதிக்குப் பிந்தி அனுப்பப்படுவதும், இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவுருதனவுமாகிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இத்தகைய விண்ணப்பதாரருக்குப் பதில் அறிவிக்கப்படமாட்டாது.

ஈ. எல். அபயகுணவர்தன,
பொலிசுப் பிரதம அதிகாரி.

பொலிசுத் தலைமைக்காரியாலயம்,
கொழும்பு 1, 1969 வைகாசி 5.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### இலங்கைப் பொலிஸ் சேவையில் பொலிஸ் கொஸ்தாப்பு தேவைக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்):—————
(விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழில் இருப்பதை அப்படியே கொடுக்க வேண்டும்)

2. தகப்பனாரின் முழுப் பெயர் :—————.

3. தகப்பனாரின் தொழில் :—————.

4. விண்ணப்பகாரரின் பிறந்த இடம் :—————.
மாகாணம் :—————.
பிறந்த இடத்திற்கு கிட்டிய பொலிஸ் நிலையம் :—————.

5. உயரம் :—————.
மார்பு இயற்கையான சுவாசம் விட்டநிலை:—————

6. 1969.7.1 ல் வயது :—————.
பிறந்த திகதி (பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்படவேண்டும்):—————

7. (அ) சாதியம் :—————.
(ஆ) நீர் பிறப்பினால் இலங்கைவாசியா அன்றேல் பதிவு செய்ததின்பேரில் இலங்கை வாசியா ?—————.
(பதிவு செய்ததினாலானால் பதிவுசெய்ய சாட்சிப் பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்)
(இ) நீர் பிறப்பினால் இலங்கையரானால் பிறந்த இடம் : —————.
தகப்பனார் பிறந்த இடம் :—————.
தகப்பனார் வழிப்பாட்டனார் பிறந்த இடம் : —————.
தகப்பனார் வழிப்பூட்டனார் பிறந்த இடம் :—————.

8. தற்போதைய தபால் விலாசம் :—————.
அந்த விலாசத்திற்கு கிட்டிய பொலிஸ் நிலையம் :—————.

9. (அ) நீர் விவாகம் செய்தவரா ? :—————
(ஆ) நீர் வைப்பாட்டி வைத்திருக்கின்றீரா ? —————.

10. தற்போதைய தொழில் :—————.

11. நீர் யுத்தசேவையில் இருந்தவரா, அன்றேல் இலங்கைப் பிரிட்டிஷ் தளங்களில் உத்தியோகம் வகித்தவரா ? (அப்படியானால் சேவை நீக்கம் செய்த பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்) ?—————.

12. கல்வித் தகைமை (சித்தியடைந்த கடைசிப் பரீட்சையைக் குறிப்பிடவும், தாராதப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படவேண்டும்) :—————.

13. ஏதாவது பிரத்தியேக தகைமைகள் உண்டா ? :—————.

14. இரு உறுதிப்படுத்துபவர்களையும் விலாசத்தையும் தருக : —————.

15. (அ) பொலிஸ் சேவையின் முன் ஏதும் பதவிக்கு மனுப் பண்ணினீரா ? (இருந்தால் விபரம்) :—————.
(ஆ) பொலிஸ் சேவையில் பதவி வகித்தீரா ? :—————.

16. நீர் அல்லது உமது உறவினர் யாராவது குற்றம் செய்திருந்தால் குற்றம் கொடுத்திருந்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தால் குற்றத்தில் ஈடுபட்டிருந்தால் விபரம் தருக :—————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

—————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்

திகதி :—————.

குறிப்பு.—விண்ணப்பதாரிகள் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பி அத்துடன் அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்து கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும் :—

பயிற்சி " அதிபர் ",
பொலிஸ் பயிற்சிப்பாடசாலை,
எக்ஸ்சலன்ஸ் சதுக்கம்,
கொழும்பு 1.

5-385—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### வட்டார வித்தியாதிகாரி பதவிகள்

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி, 14.2.69 ஆந் திகதிய 14,841 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் வெளியான அறிவித்தலுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

2. மேற்குறித்த அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் கொடுபட்டுள்ள நிபந்தனைகளாகிய வயதுக் கட்டுப்பாடு, கல்வித் தகைமைகள், கற்பித்தல் அனுபவம் ஆகியவற்றை 27. 2. 69 அன்று பூர்த்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் படிவங்களில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலாய் வீதி, கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு 30.5.69 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

3. இப்பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 25.5.69 வரை வழங்கப்படும். இந்நோக்கத்தின்பொருட்டு சொந்த விலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டப்படாத நீண்ட காகித உறை ஒன்று அனுப்பப்பட வேண்டும்.

4. முழு விபரங்களுக்கும் 14.2.69 ஆந் திகதிய 14,841 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவை பார்க்கவும்.

5. 14.2.69 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியான அறிவித்தலுக்கமைய இப்பதவிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பித்த அபேட்சகர்கள் மறுபடியும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

தொடர்பெண் : பொ. நி/25/15
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
மே 5, 1969.

5-370—15. 5. 69 ந் திகதிய வர்த்தமானி இல, 14,854.

---

## சௌக்கியத் திணைக்களம்

### தனிப்பட்ட வைத்தியத்தொழில் செய்வோருக்கான கொழும்புத்திட்டப் புலமைப்பரிசில்

"பொது உள்ளக மருத்துவத்தில்" குறுகியகாலக் கொழும்புத்திட்டப் புலமைப்பரிசிலொன்றை வழங்குவதற்காக தகைமைபெற்ற தனிப்பட்ட வைத்தியத்தொழில் செய்வோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதியன்று விண்ணப்பகாரர் 50 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

3. பயிற்சி பெறுவதற்குரிய நாடு, காலம் ஆகியன பின்னர் தெரிவிக்கப்படும்.

4. பயிற்சி பெறுவதற்குரிய நாட்டுக்குச் சென்று இலங்கைக்குத் திரும்பும் பயணச் செலவும், மாதாந்த உதவிக் கொடையொன்றும் புலமைப்பரிசிலை வழங்கும் நிறுவனத்தால் கொடுக்கப்படும்.

. அபேட்சகர்கள் கொழும்பில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குச் சமுகமளிக்க வேண்டுமென்று கேட்கப்படுவர். அதற்கான நேரமும், இடமும் பின்னர் தெரிவிக்கப்படும். இது சம்பந்தமாக பயணச் செலவுகளோ, வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் இதன்கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரியிலமைந்த ஒரு படிவத்தில் நிரப்பப்பட்டு, சௌக்கியசேவை அதிபதி, தபாற்பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்துக்கு 1969 மே மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத்தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பகாரர் அனுப்பும் காகித உறையின் இடது மேல் மூலையில் "கொழும்புத்திட்டப் புலமைப்பரிசில்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

டி. பி. குணசேகரா,
சௌக்கியசேவை அதிபதி.

தொடர்பு இல. ஜீஸிஈ 7/69
சௌக்கியசேவை அதிபதி அலுவலகம்,
கொழும்பு, 5.5.1969.

### தனிப்பட்ட வைத்தியத்தொழில் செய்வோருக்கான கொழும்புத்திட்டப் புலமைப் பரிசிலுக்குரிய விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
   (தெளிவான தனி எழுத்துக்களில்)
2. விலாசம் :————.
3. உயர்தொழிற் தகைமைகள் :————.
4. எந்தத் தேசத்துப் பிரசை :————.
5. ஆணா/பெண்ணா ? :————.
6. தனிப்பட்ட வைத்தியத்தொழில் செப்பவராகச் சேவை செய்த காலம் :————.
   (விவரங்களுடன்)
7. பிறந்த திகதியும், இடமும் :————.
8. விண்ணப்பத்தின் சார்பில் எடுத்துக்காட்டக்கூடிய ஏதாவது விசேட உரிமைக் கோரிக்கைகள் :— ——.

:————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

5-371—15. 5. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## ஆட்சிமொழித் திணைக்களம்

### ஆராய்ச்சி உதவியாளர் பதவி (சிங்களம்)

ஆட்சிமொழித் திணைக்களத்தில் ஒரு ஆராய்ச்சி உதவியாளரின் (சிங்களம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆம் தேதியோ, அதற்கு முன்னதாகவோ எனக்குக் கிடைக்க வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் ஆண்டொன்றிற்கு ரூபா 3,900—180, 240—ரூபா 6,540—5,340 ரூபாவிற்கு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத் தகைமையுடையதுமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் 3 ஆண்டு காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவர்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் நியமனத்தைக் குறுகிய கால அறிவித்தலுடன் ஏற்கும்படி வேண்டப்படுவர்.

(iii) உத்தியோகத்தரின் பிரதான கடமை வழக்கத்திலுள்ள சொற்களினதும் சொற்றொடர்களினதுக் ஒழுங்கு முறையான தொகுதியைத் தயாரிப்பதும், தேவையானவிடத்து புதியவற்றை வழங்குதலும், அதிகார பூர்வமான சொற்றொகுதியைத் தொகுக்கும் நோக்கத்துடன் அவைகளை ஒரு நிலைப்படுத்துவதாகும். அவர் ஆட்சிமொழித் திணைக்களத்திற்கு வேறு வழிகளிலும் உதவி புரிய வேண்டுமென எதிர்பார்க்கப்படுவர்.

4. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் சிங்களப் பாடத்துடன் பட்டம்பெற்ற பட்டதாரி ; அல்லது,

(ஆ) பட்டதாரிகளுக்குச் சமனுன தகுதியுடையவரும் ஆங்கிலத்தில் திறமையான அறிவுடையவருமான சிங்கள எழுத்தாளர் அல்லது நூலாசிரியர் ;

**கவனிக்குக.**—வடமொழி, பாளி அல்லது தமிழ் அறிவு மேலதிகத் தகைமையாகும்.

(இ) 1969 ஆம் ஆண்டு யூன் 8 ஆம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாதவராகவும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். அரசாங்க சேவையில் ஏற்கனவேயுள்ள விண்ணப்ப காரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது ;

(ஈ) சிறந்த ஒழுக்கமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகார்ரர்கள் அவைகளின் விண்ணப்பங்களுடன் பின் வருவனவற்றின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் **(நன்கு கவனிக்குக).**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பெறப்பட்ட உயர்ந்த கல்வி/அல்லது தொழிற்றகைமை.

(இ) விண்ணப்பகாரரின் தகைமைகள், குணவியல்பு, பதவிக்கு நியமனத்திற்கான தகுதிபற்றிய அண்மைக் காலத்திய சான்றிதழ்கள் (அரசாங்க சேவையில் ஏற்கனவேயுள்ள அபேட்சகர்கள் இத் தேவையிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவார்கள்).

**கவனிக்குக.**—சான்றிதழ்களினதும் ஒழுக்கச் சான்றிதழ்களினதும் பிரதிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. விதிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கப் பெற்ற அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் திணைக்களத்தின் தலைவரினுல் கிடைக்கப்பெற்றுச் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் தலைவரினுல் தாமதத்திற்குப் போதிய காரணம் காட்டினுல் அன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் ஆட்சிமொழி அலுவல் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டுமேயொழிய, இத் திணைக்களத்தில் உள்ள வேறெந்த உத்தியோகத்தரது சொந்தப் பெயர் முகவரிக்கு அனுப்பப்படக்கூடாது.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I, தொகுதி II ல் பிரசுரிக்கப் பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி ஆட்சி மொழி அலுவல் ஆணையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்ப காரர் தனது விண்ணப்பத்தைக் கவனிக்குமாறு கேட்கும் உரித்தை இழப்பவராவர்.**

பீற்றர் பி. அபேசேகரா,
ஆட்சிமொழி அலுவல் ஆணையாளர்.

ஆட்சிமொழித் திணைக்களம்,
22, இறீத் சாலை, அ.அ. பெ. 598,
கொழும்பு 7,
1969 ஆம் ஆண்டு மே மாதம் 7 தேதி.

## ஆட்சிமொழித் திணைக்களம்

### ஆராய்ச்சி உதவியாளர் (சிங்களம்) பதவி

1. முழுப் பெயர் திரு./திருமதி/செல்வி :————.
(தனித்தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் :————.
(ஆ) வேறு பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) 1969 ஆம் ஆண்டு யூன் 8 ஆந் தேதியன்று சரியான வயது—
ஆண்டுகள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.
(ஆ) பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4. தேசிய இனமும் அது எப்படிப் பெறப்பட்டதென்பதும் :————.

5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையின் முழுப்பெயர் :————.
(ஆ) அவரின் பிறந்த தேதியும் இடமும் :————.
(இ) அவரின் சாகியம் :————.

6. விண்ணப்பகாரர் விவாகம் செய்தவரா, செய்யாதவரா அல்லது தாரமிழந்தவரா (விவாகம் செய்தவராயின், விவாகத் தேதியையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடவும்) :————.

7. சேர்ந்த, விலகிய தேதிகளுடன் உங்களுடைய பொதுக் கல்விக்காகப் படித்த பள்ளிக்கூடங்களினதும் கல்லூரிகளினதும் பெயர்கள் : ————.

8. (அ) அவைகள் பெறப்பட்ட தேதிகளுடன் கல்வி/அல்லது உயர் தொழிற்றகைமைகளும் பெறப்பட்ட ஏதாவது தரங்களும் : ————.
(ஆ) சிங்களமும் ஆங்கிலமும், பாளி, சமக்கிருதம் அல்லது தமிழ் பாடங்களுடன் சித்தியடைந்த உயர்ந்த பரீட்சை :————.
சிங்களம் :————.
ஆங்கிலம் :————.
பாளி :————.
சமக்கிருதம் :————.
தமிழ் :————.
(இ) வர்த்தமானி அறிவித்தலிலுள்ள 4 (அ) அல்லது (ஆ) பந்தியின் கீழ் தகைமை பெற்றுள்ளீரா :————.

9. ஏதாவது இலக்கியப் படைப்பில் பெற்ற அனுபவத்தின் விவரங்கள், தேதிகளுடன் :————.

10. (அ) பள்ளிக்கூடம் அல்லது கல்லூரியை விட்டு விலகிய காலம் முதல் பார்த்த தொழில், அவற்றில் சேர்ந்த, விலகிய தேதிகள், பெற்ற சம்பளங்கள் :————.
(ஆ) அரசாங்க சேவையில் இருப்பின் தற்போதைய பதவியும் ஆண்டுச் சம்பளமும் :————.

11. ஏதாவது சிறப்பு உரிமை, தகைமைகள் பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விவரங்கள் :————.

12. உம்முடன் தனிப்பட்ட வாழ்க்கையில் நன்கு அறிமுகமான, உமது நற்சான்று சார்பாய் சான்றுபகரக்கூடியவர்களின் (உறவினர் களல்லாத பொறுப்புள்ளவர்கள்) பெயர்கள் :—
(i) ————.
(ii) ————.
(iii) ————.

13. அனுப்பிய குணவியல்புச் சான்றிதழ்கள் வழங்கிய ஆட்களின் (உறவினர்களல்லாதவர்கள்) பெயர்களும் பதவிப் பெயர்களும் (அண்மைக்காலத்திய மூன்று குணவியல்புச் சான்றிதழ்களின் பிரதிகள், மூலங்கள் அல்ல, இணைக்கப்படல் வேண்டும்) :————.

14. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

15. வேறு ஏதாவது விவரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னர் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் தகுதியற்றவராக்கப்படுதற்கும், நியமனத்திற்குப் பின் பிழை கண்டு பிடிக்கப்பட்டால் எவ்வித ஈடுசெய்தலும் இல்லாமல் விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன், என்பதையும் அறிவேன்.

————,
தேதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

5–422.—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

இல. AB. 35/X.2088/69.

## அமைச்சுக்களின் நிகழ்ச்சி முறைபடுத்தல் பகுதிகளின் வெற்றிடங்களுக்காகக் கோரப்படும் விண்ணப்பங்கள்

அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலுமுள்ள உத்தியோகத்தரிடமிருந்து நிகழ்ச்சி முறைப்படுத்தும் உத்தியோகத்தர்களின் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்வரும் அமைச்சுக்களில் நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதிகள் அமைக்கப்படவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது:

1. விவசாய அமைச்சு,
2. காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சு,
3. கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு,
4. அரசாங்கக் கட்டுவேலை, அஞ்சல், தொலைத்தொடர்பு அமைச்சு.
5. தேசிய சேவைகள் அமைச்சு,
6. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
7. கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு.

2. கீழ்வரும் அமைச்சுக்களில் நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதிகள்

**குறிப்பு.**—இப்பகுதிகள் நிரந்தரச் செயலாளர்களின் கீழ் நேரடியாக இயங்குவதுடன் அமைச்சுக்களின் தனிப்பட்ட திட்டங்கள், திட்டங்களைச் செயல்படுத்தல் போன்ற முயற்சிகளையும் மேற்கொள்ளும். நிகழ்ச்சி முறைப்படுத்தல் பிரிவுப் பகுதிக்குப் பணிப்பாளர் ஒருவர் தலைமை வகிக்க ஏனைய உத்தியோகத்தர் பலவிதமான பொறுப்புள்ள துறைகளில் உதவிபுரிவார்கள்.

3. இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர் தாங்கள் தற்போது வகிக்கும் நிலையான பதவிகளிலிருந்து 3 ஆண்டுக் காலத்திற்கு விடுவிக்கப்படுவர். இப்பதவிகளுக்கான நிரந்தர நியமனங்கள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இந்த விடுவிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஆகக்கூடிய தொகை ஒரு மாதத்திற்கு ரூபா 250/– வரையான படிக்கு (Allowance) தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், அவர்களின் கல்வித் தகைமை, வேலை அனுபவம், கிடைத்த சம்பளம் முதலியவற்றிற்கேற்ப உரித்துடையவராவர்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர் எவ்வெவ் அமைச்சுக்களில் நியமிக்கப்படுவார்கள் என்பது திட்டமிடுதல், பொருளியல் விவகார அமைச்சினால் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் ஆலோசனையுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

5. அரசாங்க சேவையிலும் அரசாங்க தனியார் கூட்டுத்தாபன சேவையிலுமுள்ள உத்தியோகத்தர் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதிகளுக்கு தொழில்நுட்ப, நிருவாக சேவையிலுள்ள உத்தியோகத்தர் தேவைப்படுவார்கள். இவ்வகையான உத்தியோகத்தர் எந்திரிமார், நிருவாகிகள், பொருளியலர், விஞ்ஞான ஆளணி போன்றவர்களில் அவ்வவ்வமைச்சுக்களின் நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதிகளின் வேலைக்குத் தகுந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. **நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதிப் பணிப்பாளர்.**—

குறைந்த பட்சம் 12 ஆண்டுகள் பதவியினர் தர மொன்றில் (Staff Grade) வேலை அனுபவமுள்ள அரசாங்க அல்லது அரசாங்க தனியார் கூட்டுத்தாபனங்கள் அல்லது இரண்டையும் சார்ந்த உத்தியோகத்தர் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்கள்.

2. **நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதி பிரதிப் பணிப்பாளர்.**—

குறைந்தபட்சம் 8 ஆண்டு பதவியினர் தர மென்றில் வேலை அனுபவமுள்ள அரசாங்க அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது இரண்டையும் சேர்ந்த உத்தியோகத்தர் விண்ணப்பிக்கத் தகுதியடையவராவார்கள்.

3. **நிகழ்ச்சி முறைப்படுத்தல் பகுதி உதவிப் பணிப்பாளர்.**—

குறைந்த பட்சம் 4 ஆண்டு பதவியினர் தர மொன்றில் வேலை அனுபவமுள்ள அரசாங்க அல்லது அரசாங்க தனியார் கூட்டுத்தாபனங்கள் அல்லது இரண்டையும் சேர்ந்த உத்தியோகத்தர் விண்ணப்பிக்கத் தகுதியடையவராவார்கள்.

**குறிப்பு.**—கூடிய கல்வித் தகைமையும் உத்தியோக சேவையில் குறிப்பிடத்தக்க சிறந்த முறையில் சேவையுமாற்றியுள்ள விண்ணப்பக்காரருக்கு வேலை அனுபவம் சம்பந்தமான தேவையைக் குறைப்பதுபற்றித் தெரிவுக்குழு ஆராயலாம்.

6. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவமுறையில் அரைத்தாள்களில் தயாரிக்கப்பட்டு, 1969.5.30 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு விண்ணப்பிப்போர் அவ்வப்பதவிக்குரிய தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்கசேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு வைகாசி மீ 9 ந் வ.

இல. AB. 35/X./2088/69.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**அமைச்சுகளின் நிகழ்ச்சி திட்டப்பிரிவுகளின் வெற்றிடங்கள்**

1. விண்ணப்பிக்கும் பதவி : ———.
2. முழுப்பெயர் : ———.
3. சாகியம் : ————.
4. விலாசம் : ————.
5. பிறந்த திகதி : ———.
6. கல்வி மற்றும் பிற தகைமைகள் : ———.
7. பதவியினர் தரத்தில் (Staff Grade) அனுபவம் : ———.
8. விசேஷ தகைமைகள் (உளதாயின்) : ————,

என்னால் மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

———,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ———.

5–477—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854.

---

## வன பகுதி

### வேலைத்தல முகாரியின் பதவி

வன திணைக்களத்தின் ஆராய்ச்சிக் கல்விக் கிளையில் ஓர் வேலைத்தல முகாரியின் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்பப்பட்டு வனபாதுகாவல் அதிபர், த. பெ. இல. 509, கொழும்பு 2, என்ற விலாசத்துக்கு 1969 ம் ஆண்டு யூன் மாதம் 1 ம் திகதியோ அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் ரூபா 2,820—120/180—ரூபா 5,340 ஆகும்.

3. **தேவைப்படும் தகைமைகள் :**

(அ) 1969 ம் ஆண்டு யூன் மாதம் 1 ம் திகதி விண்ணப்பகாரர் 20 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாடு மற்றய தகைமைகளைப் பெற்றிருக்கும் இத் திணைக்கள ஊழியரைக் கட்டுப்படுத்தாது.

(ஆ) 1. தூயகணிதமும், பௌதிகமும் பாடமாக அமைந்த சிரேஷ்ட தாரதர பத்திரமோ அல்லது அதே போன்ற தாரதரமுடைய பத்திரமுடையவர்.

2. கனிஷ்டத் தொழில் நுட்பச் சான்றிதழ் உடையவர் (கட்டுப்பெத்தவிலுள்ள இலங்கைத் தொழில் நுட்பமுறைக்கழகத்தின் செயல் முறைத் தொழில்நுட்பக் கல்லூரியின் பொறிமுறை அல்லது மின்சார எந்திரவியல்) அல்லது

அம்பாறையிலுள்ள காடி சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியின் தகுதித் தேர்வுப் பத்திரம் (பொறிமுறையும் மின்சாரமும்) அல்லது

கல்வி அமைச்சின் ஏதாவது ஒரு தொழில் நுட்பக் கல்லூரியில் பொறிமுறையிலும் மின்சார எந்திரவியலிலும் மூன்று வருடமாகப் படிப்பை திருப்திகரமாக முடித்த சான்றிதழ், அத்துடன்

3. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கழகத்தில் அல்லது அரசாங்க திணைக்களத்தில் 5 வருட தொழில் பயிற்சி உடையவர், அத்துடன்

4. தொழில் பயிற்சி முடிந்த பின் 5 வருடங்கட்கு குறையாமல் அங்கீகரிக்கப்பட்ட கழகத்தில் செயல்முறை அனுபவமுடையவர்.

4. **சேர்வு நியதிகள் :**

பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையானதுமாகும்.

5. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களோடு கீழ்க்காணும் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்பிரதிகளல்ல) இணைக்கவேண்டும் ;

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (ஞானஸ்நானம் செய்யும்போது கொடுக்கும் பத்திரமும், உதவி பெறும் பாடசாலைகளுக்காகிய விதிகளுக்கமையக் கொடுக்கப்படும் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தகைமைகளின் சான்றிதழ்கள்.

(இ) விண்ணப்பதாரரின் குணம், பதவிக்குப் பொருத்தம் பற்றிய சமீபகாலத்தில் பெறப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

6. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ம் பகுதி, II ம் தொகுதி ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்கட்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

7. குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின் வந்து சேரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

8. விண்ணப்பங்களோ அன்றி இப்பதவி பற்றிய வேறு எவ்வித கடிதத் தொடர்புகளோ பதில் வனபாதுகாவல் அதிபருக்கே அனுப்பப்பட வேண்டும். இத்திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவருக்குமாவது தனிப்பட்ட விலாசத்திற்கு அனுப்பக்கூடாது.

டபிள்யூ. ஆர். எச். பெரேரா,
பதில் வனபாதுகாவல் அதிபர்.

வனபாதுகாவல் அதிபரின் அலுவலகம்,
த. பெ. இல. 509,
கொழும்பு 2,
7 மே, 1969.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் : ———.
(தடித்த எழுத்தில்)
2. விலாசம் : ———.
3. பரம்பரையாக இலங்கையரா அல்லது பதிவால் இலங்கையரா : ———
4. (அ) பிறந்த திகதி : ———.
(ஆ) 1969 யூன் 1 ம் திகதியில் வயது —
வருடங்கள் ——— மாதங்கள் ———.
5. தற்பொழுது ஏதாவது பதவியிலிருந்தால் அதன் விபரம் :———.
6. ஆக உயர்வான கல்வித் தகைமைகள் : ———.
7. முன்பு ஏதும் தொழிலிலிருந்திருந்தால் அதன் விபரம் : ———.
8. சிறப்புத் தகைமைகள் ஏதுமிருப்பின் அவை : ———.

———,
திகதி : ———. விண்ணப்பதாரரின் ஒப்பம்.

5-426—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பதவி வெற்றிடம்

செய்தி—வெளியீட்டுப்பகுதி அதிபர் பதவிக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வகலாசாலையில் விசேட அல்லது உயர்தரப் பட்டம், அல்லது அதற்கிணையான தகைமையும் பொது அல்லது தனியார் துறையில் உயர் பதவியில் 10 ஆண்டு அனுபவமும், பத்திரிகை அனுபவமும் இருப்பது நலம் ;
அல்லது
அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டமும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை அல்லது ஒலிபரப்புத் தாபனத்தில் செய்திப்பகுதியில் 10 ஆண்டு அனுபவம் ;
அல்லது
அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் இடைநிலைப் பரீட்சையில் அல்லது அதற்கிணையான பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகைத் தாபனத்தில் ஆசிரிய பதவியில் அல்லது ஒலிபரப்புத் தாபனத்தில் செய்திப் பகுதியில் 15 ஆண்டு அனுபவம் ;
(ஒலிபரப்புப் பகுதி/கூட்டுத்தாபனத்தில் 20 ஆண்டுகளுக்குக் குறையாத ஒலிபரப்பு அனுபவமுடைய உத்தியோகத்தர்கள் குறைந்த பட்சம் லண்டன் மெற்றிக்குலேசன் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருந்தால் மேற்கூறப்பட்ட கல்வித் தகைமைகள் தேவையில்லை) ;

அத்துடன்

(ஆ) சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் நல்ல அறிவு. தமிழறிவு மேலதிக யோக்கியதாம்சமாகும் ;

(இ) தேசிய சர்வதேசச் செய்திகளில் சிறந்த அறிவு ;

(ஈ) வெளியீடுகள் தயாரித்தலிலும், நிர்வாகத்திலும் அறிவு.

**வேதன விகிதம் :**

மாதம் ரூபா 1,250—1,750 (10×50). ரூபா 1,350 க்கு முன் திறமைக் கடவை.

**வயது :** 30–45 ஆண்டுகள்.

விண்ணப்பங்கள் இத்துடன் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தின் வடிவில் அமைக்கப்பட்டு " மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், கொழும்பு 7 " என்ற விலாசத்துக்கு 27.5.1969 க்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். உறையின் இடதுபுற மேல் மூலையில், அதிபர், செய்தி—வெளியீட்டுப்பகுதி என்று குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

என். டி. ஜயவீர,
மா அதிகாரி.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு 7,
மே 9, 1969.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

.......................................பதவி

1. முழுப்பெயர் : ———.
2. விலாசம் : ———.
3. தேசிய இனம் : ———.
4. விண்ணப்பதாரர் பிறந்த இடமும், திகதியும் : ———.
(பிறப்புப் பத்திர நகல் இணைக்கப்படல் வேண்டும்)
5. விண்ணப்பதாரரின் தந்தை பிறந்த இடம் : ———.
6. கல்வித் தகைமைகள்—
சிங்களம் : ———.
தமிழ் : ———.
ஆங்கிலம் : ———.
7. நற்சாட்சிப் பத்திரம் வழங்கியுள்ளோர் பெயர்களும், விலாசங்களும் : ———.
(நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
8. முன் வகித்த உத்தியோகம் பற்றிய விபரங்கள் : ———.
9. பிற விபரங்கள் : ———.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். நான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நியமனம் பெற்று, இதிலுள்ள விபரங்களில் எதுவேனும் பிழையெனக் காணப்பட்டால் நான் வேலையிலிருந்து நீக்கப்படலாம் என்பதையும் என் முந்திய உத்தியோகம் பற்றிய உண்மை எதையும் வேண்டுமென்றே மறைத்திருந்தாலும் எனக்கு அது போன்ற தண்டனை அளிக்கப்படலாம் என்பதையும் அறிகிறேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ———.

5-480—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14, 854

---

## இலங்கை வங்கி

### சட்டத்துறையும், பொறுப்பாண்மையாளர் பகுதி

### உதவியாளர் பதவி

இலங்கை வங்கி சட்டத்துறையும், பொறுப்பாண்மையாளர் பகுதியில், உதவியாளர் பதவிக்கு, பிரசித்த நொத்தாரிசும், உயர்நீதிமன்ற வழக்குரைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அவர்கள் இலங்கைப் பிரசையாகவும், 1969 ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதியின் 35 வயதுக்கு மேற்படாதவராகவும், 5 ஆண்டுகளுக்காயினும் அத்துறையில் சுறுசுறுப்பான அனுபவமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். கீழ்குறிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட காணி உரிமை மேலாய்வதில், நொத்தாரிசு வேலையில் அனுபவம், சட்டமுறை உறுதிகள் மற்றும் சட்ட ஆவணங்கள் தொடர்பாக அரசகரும மொழியில் உயர்தரமாக தேர்ச்சியுற்றிருப்பது இப்பதவிக்கு தேர்ந்தெடுப்பதில் அனுகூலமெனக் கருதப்படும். இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 485—ரூ. 965

8×30, 6×40

ஆனால் நியமிக்கப்பெற்றவரது தகைமைகளுக்கும் அனுபவத்திற்கு மேற்ப சம்பள விகிதம் இச்சம்பள அளவுத்திட்டத்துக்குள் அடங்கும். மேலும் இலங்கை வங்கியின் விகிதத்திற்கு அமைய வாழ்க்கைச் செலவுப் படி பெறுவர்.

2. நியமிக்கப்பெற்றவர்—

(அ) நியமனத்திற்கு முன்னதாக வைத்திய பரிசோதனை செய்யப்பட்டு அதில் தகுதியுடையவராகக் காண வேண்டும்.

(ஆ) ஒரு ஆண்டுக்கு உட்படாமலும் 3 ஆண்டுகட்கு மேற்படாமலும் நியமிக்கப்பெற்ற திகதி தொடக்கம் தகுதிகாண் நிலையில் கடமையாற்ற வேண்டும். இக் காலத்திற்குள் இலங்கை வங்கியினால் அல்லது அதன் சார்பில் நடாத்தப்படும் அரசகரும மொழி 3 ம் படிநிலை தேர்வுப் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.

(இ) வங்கியின் ஓய்வுகால உபகாரச் சம்பளத் திட்டத்தில் சேரவேண்டும்.

(ஈ) திருத்திகரமான சேவையும், மேற்குறிக்கப்பட்ட காலத்தில் அரசகரும மொழியில் நடாத்தப்படும் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைவதைப்பொறுத்து சேவையில் சேர்ந்து ஒரு ஆண்டு பூர்த்தி செய்தபின் அவரது நியமனம் உறுதிப்படுத்தப்படும்.

(உ) 1956 ம் ஆண்டின் 33 ம் இல. அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க மொழிக் கொள்கையை செயற் படுத்துவதற்கு தற்போதுள்ள அல்லது வருங் காலத்தில் புகுத் தக்கூடிய எந்தச் சட்டங்களுக்கும் இணங்கி ஒழுகுவரென்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

3. (அ) பந்தி 1 ல் மேற்குறிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில், முதற் சம்பள ஏற்றம் பெறுவதற்கு, வங்கியினுல் அல்லது அதன் சார் பில் நடாத்தப்படும் அரசகரும மொழி 1 ம் படிநிலை தேர்வுப் பரீட்சையில் சித்திபெற்று துறைக்குத் தேவையான காலத்துக்கு சேவை செய்யா விட்டால் அச் சம்பள ஏற்றத்திற்கு உரிமையுள்ளவராக இருக்கமாட்டார்.

(ஆ) பந்தி 1 ல் மேற்குறிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில் 2 வது சம்பள ஏற்றம் பெறுவதற்கு வங்கியினுல் அல்லது அதன் சார்பில் நடாத்தப்படும் அரசகரும மொழி 2 ம் படிநிலை தேர்வுப் பரீட்சையில் சித்திபெற்று துறைக்குத் தேவையான காலத்துக்கு சேவை செய்யா விட்டால் அச் சம்பள ஏற்றத்துக்கு உரிமையுள்ளவராக இருக்கமாட்டார்.

4. (அதிகாரம் 397) இலங்கை வங்கி உரிமைக் கட்டளையின் விதி முறைகட்கு ஒப்ப நியமிக்கப்பெற்றவர் பிணை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

5. வங்கியின் பத்திரங்களில் (கீழ் ஒப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்) விண்ணப்பித்து தபால் உறையின் இடதுபக்க மூலையில் " உதவியாளர்—இலங்கை வங்கி சட்டத்துறையும், பொறுப்பாண்மை யாளர் பகுதி " என எழுதி முகாமையாளர், ஆளணி பகுதி, இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், யோர்க் வீதி, கொழும்பு என்ற விலாசத் துக்கு 1969 ம் ஆண்டு மே மாதம் 28 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் தாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும். முடிவுத் திகதிக்கு சில நாட்களுக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்புபவர்கள் தாங்களே இடர்வுகளுக்குப் பொறுப்பாயிருப்பர். விண்ணப்பகாரர்கள் தங்கள் விண் ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படு கின்றனர்.

6. தங்கள் விண்ணப்பங்கள் கிடைத்ததற்கு பதில் வேண்டுவோர் தங்கள் முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பகாரர் கள் கீழ்க்காணப்படும் பிரதிகளை (மூலப்பிரதி அல்ல) இதற்கான விண் ணப்பத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**குறிப்பு.**—ஞானஸ்நானச் சான்றி தழ்கள் அல்லது உதவிப் பணம்பெறும் பாட்சாலைகளுக்கான கட்டளைச் சட்டங்களின் சேவைகளின் பொருட்டு விநியோகிக்கப் பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) விண்ணப்பகாரரின் திறமை, நடத்தை பற்றி அண்மையில் பெறப் பட்ட மூன்று நற்சாட்சிப்பத்திரங்கள்.

7. குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டுமென்று விண்ணப்பகாரர்கள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெந்தவகையான செலவோ கொடுக்கப்பட்ட மாட்டாது.

8. தேவையான தகுதிகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டா மென தயைகூர்ந்து வேண்டப்படுகின்றனர். இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றிற்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் தான் இலங்கைப் பிரசையென அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

10. தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப் பின் அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் அவ் விண்ணப்ப காரருக்கு தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்கு பின்னர் கண்டு பிடிக்கப்படின் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

11. விண்ணப்பகாரரை சிபார்சு செய்யவிரும்பும் எவரும் அவ் விண்ணப்பகாரருக்கு குணநல அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனுல் குறித்தவோர் விண்ணப்பகாரர் விடயத்தில் தலையிட்டு அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அவ் விண்ணப்பகார ருக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

டீ. ஈ. பெரெரா,
முகாமையாளர், ஆளணி பகுதி.

5–417—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## தொழிற்றிணைக்களம்

### தொழில் உத்தியோகத்தர் பதவிகள்

தொழிற் றிணைக்களத்தில் தொழில் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பஞ் செய்வோர், இவ் வறிவித்தலினடியிற் குறித்துக் காட்டப்பட்டுள்ள வகையில் மாதிரிப் படி வத்தினை அமைத்தெழுதி, 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் தேதி யன்றோ அதற்கு முன்னதாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமைபற்றி விண்ணப்பகாரர் எல்லோருக்கும் எழுதியறி விக்கப்படும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி கள் நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பள உரிமையும் உடையவை. வித வையர், அநாதையர் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு உதவு தொகை செலுத்தப்படும்.

(ii) அரசாங்க சேவையில், நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பளவுரிமை யுமுடைய பதவியை வகித்துக்கொண்டிருப்பவரொருவர் தெரிவு செய்யப் பட்டால், தெரிவால் ஏற்படுகின்ற ஆளின்மையை மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத காலம்வரை நிரப்பாமல் பதிலடிப்படையில் வைத்திருக்க அவரது திணைக்களம் இயைவுகாட்டுமாயின், பதில் வகையில் அவரை நியமித்துக்கொள்ளலாம். தாம் தெரிவு செய்யப்படும் வேளையில், தமது திணைக்களத் தலைவர் தம்மை விடுவிக்கவோ தமது பதில் நியமன காலத் தில் ஆளின்மையை நிரப்பாது வைத்திருக்கவோ ஆயத்தரல்லாவிடின், தமது நிலையான பதவியைவிட்டு விலகத் தாம் ஆயத்தராயிருப்பதாக விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களில் உறுதிகூறியிருப்பின், அவர் கள் விண்ணப்பங்கள் எடுத்துக் கருதப்படுவனவாகும்.

3. **சம்பள அளவைத் திட்டம்.**—இப் பதவிகளுக்கான சம்பள அள வைத்திட்டம் பின்வருமாறு :—

(i) வகுப்பு III—ரூபா 2,940—ரூபா 120 உயர்வுகள் 8—ரூபா 3,900, ஆண்டுக்கு (ரூபா 3,420 வருமுன் திறமைக் கடவை). வகுப்பு II—ரூபா 4,080—ரூபா 180 உயர்வுகள் 7—ரூபா 5,340 ஆண்டுக்கு (ரூபா 4,800 வருமுன் திறமைக் கடவை). வகுப்பு I—ரூபா 5,580—ரூபா 240 உயர்வுகள் 5—ரூபா 6,780, ஆண்டுக்கு.

(ii) இம் மூன்று வகுப்புகளும் (I, II, III) தொடர்ந்த கால அள வைத் திட்டமாக அமைந்துள்ளன.

4. **கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்.**—விண்ணப்பகாரர், தாம் பின்வரும் வகைகளில் தகைமை வாய்ந்திருப்பதனை நிறுவுவதற் குப் போதுமான சான்றுகள் காட்டுதல் வேண்டும். விண்ணப்புகாரர்,

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயிருத்தல் வேண்டும்,

(ஆ) 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் தேதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை 40 ஆண்டுகள் ஆகும்.)

(இ) அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகப் பட்டதாரியாகவோ, தமது தொழிலினைச் செய்வதற்கு உரிமைதரும் தொழிற்றகை மைகள் பெற்றுள்ளவராகவோ இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) அரசாங்க சேவையில் 10 ஆண்டுகள் நிறையப்பெற்று, சிரேட்டபாடசாலைச் சான்றிதழ்த் தேர்வில் சித்திபெற்றவர்களாயிருப் போரின் விண்ணப்பங்களும், திணைக்களத் தலைவரே விண்ணப்பகாரர் தனிச் சிறப்புள்ள திறமை பெற்றுவிளங்குகிறுர் எனப் பின்வரும் வகையில் உறுதிப்படுத்திருாயின், கருதப்படுவனவாகும்.

" இத் திணைக்களத்தில்............தரத்தில் சேவை புரிந்து ............ஆண்டுகள் அரசாங்க சேவை நிறைவுபெற்றுள்ள திரு. ..........................தனிச் சிறப்புள்ள திறமைவாய்ந்த அலுவலாளர் எனவும், அவர் தொழில் உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றுவதற்கான உளச்சார்பு உடையவராய் விளங்குகின்றுர் எனவும் யான் உறுதிப்படுத்துகின்றேன்.

..................

தேதி :........ திணைக்களத் தலைவர். "

(ii) முன்னைநாட் படைச் சேவையாளரும், போர்ச் சேவைச் சலுகை யின் கீழ்த் தகுதிபெறும் பிறரும், கலை–விஞ்ஞான–வர்த்தக இடை நிலைப் பட்டதாரித் தேர்வுகள் எவற்றிலேனும் சித்திபெற்றவராயிருப் பின், விண்ணப்பிக்கலாம்.

5. அரசாங்க சேவையிலுள்ள அலுவலாளர்கள் அனுப்புகின்ற விண் ணப்பங்கள், விண்ணப்பம் ஏற்கும் இறுதி நாளன்றோ அதற்கு முன்ன தாகவோ எமக்குக் கிடைக்கும் வண்ணம், அவ்வத் திணைக்களத் தலைவர் கள் மூலமாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பங்களையும், தொடர்புபட்ட பிற கடிதங்களையும், எமக்கோ பிற அலுவலாளர்களுக்கோ பெயர் குறிப்பிட்டெழுதாமல், " தொழில் ஆணையாளர், தொழிற்றிணைக்களம், கீழைவாவி வீதி, கொழும்பு 3 " என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்டோர், தீவின் எப்பாகத்திலும் பணியாற்றும் படி வேண்டப்படுவர். அத்துடன், அலுவலக உத்தியோகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட வாகன வண்டியொன்றினை சேவைபுரியக்கூடிய நிலை

றில வைத்துப் பராமரிக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுவர். மேற் கொள்ளப்படும் பிரயாணங்களுக்கு நிதிப் பிரமாணங்களின்படி பிரயாணச் செலவு கொடுக்கப்படும்.

8. இவ்வரசாங்கச் செய்திமடலில் I ம், பகுதி (II) ம் பிரிவின் தொடக்கத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் தம்மையும் நோக்குமாறு வேண்டுகின்றேம்.

ரி. ஆர். ஆர். விஜேவிக்கிரம,
தொழில் ஆணையாளர்.

தொழிற் றிணைக்களம்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு மே மாதம் 6 ந் தேதி.

## குறிக்கப்பட்ட படிவம்

### தொழில் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. சொந்தப் பெயர் :————.
(தெளிவான எழுத்துகளில்)
பிற பெயர்கள் :————.
முகவரி :————.

2. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழின் படியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் தேதியன்று.
ஆண்டுகள் :————. மாதங்கள் :————.
(இ) நாட்டினம் :————.

3. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.
(விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்தவராயின், (அ) வுடன் (ஆ) வோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்திராதவராயின், (அ) வுடன் (ஆ), (இ) ஆகிய இரண்டுமோ, அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டுமோ நிரப்பப்படுதல் வேண்டும்.)

4. விண்ணப்பகாரர் திருமணஞ் செய்தவரோ, செய்யாதவரோ ? : ————.

5. கல்வி—தொழில்—தகைமைகள் :————.
(சான்றிதழ்ப் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

6. (அ) தியணைப்புப் படை, விமானத் தாக்குதற் பாதுகாப்புப் படை, ஊர்ப் பாதுகாப்புப் படைச் சேவைகளில் தொடர்ச்சியாகப் பணி புரிந்த காலவெல்லை :—
தொடக்கம் ............ வரை ............
(ஆ) போர்ப் படையிற் பணிபுரிந்த காலவெல்லை :—
தொடக்கம் ............ வரை ............
(முக்கியமான குறிப்பு.—(அ), (ஆ) பற்றிய சான்றிதழ்களின் படிகள், சேவையிலிருந்து விலகியதற்கான காரணங்களையும் கொண்டனவாய், இணைக்கப்படுதல் வேண்டும்.)

7. அரசாங்க சேவையிலுள்ளவராயின், 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் தேதியன்று விண்ணப்பகாரருக்கு 10 ஆண்டுச் சேவை நிறைவுற்றுள்ளதோ எனக் குறிப்பிடுக.
(தயவு செய்து திணைக்களத் தலைவரின் சான்றிதழினை இணைத் தனுப்பவும்.)

8. விண்ணப்பகாரர், பின்வரும் மொழிகளில் தங்குதடையின்றி உரையாட முடியுமோ எனக் குறிப்பிடுக :—
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.

9. விண்ணப்பகாரர், பின்வரும் மொழிகளை எழுதி வாசிக்கும் வன்மை பெற்றுள்ளாரோ எனக் குறிப்பிடுக :—
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.

10. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகியபின், எங்கெனினும் வேலைக்கமர்ந்திருந்தால் அதனைக் குறிப்பிடுக :————.

11. விண்ணப்பகாரருக்குத் தொழிலாளருடன் செயற்றெடர்பு வகையில் அனுபவம் ஏதேனும் இருப்பின் அதைக் குறிப்பிடுக :————.

12. விண்ணப்பகாரருக்குத் தொழிற் சட்டங்கள் பற்றிய அறிவு உள்ளதா?
(அ) உள்ளூர் :————.
(ஆ) பொது :————.

13. விண்ணப்பகாரருக்கு, இலங்கைத் தோட்டங்களிலும், கைத்தொழில் முயற்சிகளிலுமுள்ள தொழிலாளர் நிலைமைகள் பற்றிய அறிவு உண்டா ? உண்டெனின், அவ்வறிவு எங்ஙனம் பெறப்பட்டதெனக் கூறுக : ————.

14. விண்ணப்பகாரருக்கு, பிரயாணம் செய்த அனுபவம் உள்ளதா ? :
(அ) இத் தீவினுள் :————.
(ஆ) வெளி நாடுகளில் :————.

15. விண்ணப்பகாரர், தமது விண்ணப்பத்தினுக்கு ஆதாரம் தேடும் வகையில் அழுத்திக் கூறவிரும்பும் உரிமைக் கோரிக்கைகள் எவையேனும் இருப்பின், அவற்றைக் கூறுக :————.

16. விண்ணப்பகாரரின் திறமை, நல்லொழுக்கம் பற்றி விசாரித்தறிவதற்கு, உயர் நிலையிலுள்ள இருவரின் பெயரும் முகவரியும் தருக :
(1) ————.
(2) ————.

17. சான்றிதழ் வழங்கியோர் விவரம் :—
(அண்மையிலே பெற்றுக்கொண்டனவாய் மூன்றுக்கு மேற்படாத சான்றிதழ்களின் படிகளை இணைத்தனுப்புக. மூலப் படிகள் அனுப்பப்படுதலாகாது).
(1) ————.
(2) ————.
(3) ————.

இவ்விண்ணப்பத்தில் யான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் திட்பமானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவ் விவரங்களில் எவையேனும் உண்மையற்றவையென யான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னதாகக் கண்டுபிடிக்கப்பட்டால, தகுதியற்றவனுக்கப்படுவேன் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிச் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் யான் அறிவேன்.

————,
தேதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

5—448—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

எனதெண் : பொ. நி/5/77.

## கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

### கைப்பணி செய்துகாட்டுவோர் பதவிகள்

கீழ்க்காணும் 4 (ஆ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் கைப்பணி செய்துகாட்டுவோர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்வோரிடமிருந்து கோரப்படுகின்றன. இப்பதவிகள் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் உண்டு. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு நிரந்தரக் காரியதரிசி, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு (பொது நிர்வாகக் கிளை) மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின், தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரிய வேண்டும்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. சம்பளமும் சகாயப்படிகளும் :

இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—
ரூ. 1,860—120 × 8—2,820 வருடாந்தம்.

4. தேவைப்படும் தகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தில் வேலை செய்பவராக இருக்க வேண்டும்.

(ஆ) பின்வரும் தொழில்களில் ஒன்றில் அல்லது கூடியவற்றில் சிறந்தளவு சாமர்த்தியம் உடையவராய் இருக்க வேண்டும். (பல தொழில்களில் திறமை பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) :—

உலோகவேலை, மரவேலை, மரவேலையும் மூட்டு வேலையும், பேனை செய்தல், மின்சாரத் தொழில்கள், இலத்திரனியல் தொழில்கள், தொலைச் செய்திப் போக்குவரத்து, மோட்டார் பொறிநுட்பம், தன்னியக்கி பொறிநுட்பம், வார்ப்பு வேலையும் கம்மாலை வேலையும், கட்டு வேலை, கட்டடத் தொழில்.

(இ) திறமைபெற்ற வேலையாளராக குறைந்தபட்சம் 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். அல்லது அரசாங்க தொழில்நுட்ப நிலையத்தில் அல்லது அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரி நிலயத்தில் தொழில்நுட்பத் தொழிலில் 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் (அடிப்படைத் தொழில்நுட்பப் பயிற்சி நிலயத்தில் போதனாசிரியராகப் புரிந்த சேவை அத்தகைய சேவையாகக் கணிக்கப்படும்).

(ஈ) (i) அத்தகைய சேவைக்காலம் ஒரு வருடத்துக்குக் குறையாத காலம் 1 ஆம் வகுப்புப் பதவிக்கான உச்சிப் படிச் சம்பளத்தில் (அதாவது ரூ. 1,674 இல்) சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(ii) தெரிவுத் தரத்தில் (ரூ. 1,320—72—2,184) வேலையாளராக இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் ஏதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம் ;

(ஆ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமை பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும் ;

(இ) மேற்போந்த 4 (இ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப் படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள் ;

(ஈ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

**குறிப்பு—**

(i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் தீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதி/நிலயத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், விண்ணப்பத்தின் ஒரு பிரதி நேரே இவ்வமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும்.

7. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் அபேட்சகர்கள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் மகா வித்தியாதிபதிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரச் செயலாளர்.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
9.5.1969.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கைப்பணி செய்துகாட்டுவோர் பதவிக்கான விண்ணப்பம்

(தொடர்பெண் : பொ. நி /5/77)

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.
2. நிரந்தர விலாசம் (விலாச மாற்றம் எதுவேனும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்) : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————. பிறந்த திகதி : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் : —.
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினலா பதிவு காரணமாகவா ? : ————.
7. கல்வித் தகைமைகள் —
   (i) பொது : ————.
   (ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகமைகளும் : ————
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை :————.
8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (இ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலயம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு : ————.
12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
    (அ) படைக்கூற்றின் பெயர் : ————.
    (ஆ) வகித்த பதவி : ————.
    (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.
14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம்—
    (i) வகித்த பதவி : ————.
    (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
    (iii) விலகியதற்கான காரணம் : ————.
15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.
16. தற்போதைய உத்தியோகம்—
    பகுதி :————.
    (i) பதவிப் பெயரும் தரமும் : ————.
    (ii) நியமனத் திகதி : ————.
    (iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா ? :
    (iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.
    (v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.
17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னாயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

(பகுதித்தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)
எனது எண் :
உங்கள் எண் : பொ. நி. 5/77.

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின்முன்/* பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

.................... இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/*பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————————,
பகுதித் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.

*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

5-487—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## இலங்கை அரச விமானப்படை உத்தியோகத்தருக்கான வெற்றிடங்கள்

**(நிருவாக/சாதன தொழிநுட்ப எந்திரவியல்) கிளைகள்**

இலங்கை அரச விமானப்படையில் கீழ்க்காணும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) நிருவாக/சாதனக்கிளையில் ஆறு உத்தியோகத்தர்கள்.

(ஆ) தொழிநுட்ப (எந்திரவியல்) கிளையில் மூன்று உத்தியோகத்தர்கள்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் இலங்கை அரச விமானப்படையில் விமானம் ஓட்டும் உத்தியோகத்தர் வரிசையில் ஆணை வழங்கப்படுவார்கள்.

3. நிருவாக/சாதனக்கிளையில் கடமையாற்றும் உத்தியோகத்தருடைய கடமைகள் (சகல விமானப் படை உத்தியோகத்தருடைய வழக்கமான கடமைகளை விட) இலங்கை அரச விமானப்படையின் தகவுப் பொருத்தமான ஆதாரங்களுடன் தொடர்புடையது. (அதாவது, இருப்புப் பொருள்கள், வானூர்தி, வாகனங்கள், தொழிநுட்பச் சாதனங்கள், எரிபொருள், வெடிப்பொருள் ஆகியனவற்றை வழங்கல், அசைவு மதிப்பீடு செய்தல், கட்டளையிடுதல், பெறுதல், களஞ்சியத்திடுகை, கணக்கிடுதல் ஆகியனவும் விமானப்படை நிருவாகமும் கணக்குப் பார்த்தலும் ஆகும்.)

4. தொழிநுட்ப (எந்திரவியல்) கிளையிலுள்ள உத்தியோகத்தருடைய கடமைகள் (சகல விமானப்படை உத்தியோகத்தருடைய சாதாரண கடமைகளைவிட) வானூர்தி அமைப்பு, உந்துவிசை அலகுகள், விமானச் சுழல் விசிறி, வளியியக்கம் சார்ந்த இயற்பியல், வானூர்தி காற்றுப்பட்டை, வானூர்திக்குப் பொருத்தப்பட்டிருக்கும் பொறி முறைச் சாதனம் ஆகியனவற்றுடன் சம்பந்தப்பட்ட வேலைகளும் இலங்கை அரச விமானப்படையில் பொது எந்திரவியலும் தொழிநுட்ப நிருவாகமுமாகும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் தேவைப்பட்டபடி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பயிற்சி பெறக் கோரப்படலாம்.

6. **வேதனமும் படிகளும் :**

சம்பளமும் படிகளும், 1961 ஏப்ரல் 28 ல் இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 12,395 ல் பிரசுரமாகி, காலத்துக்குக் காலம் மாற்றம் செய்யப்பட்ட விமானப்படை வேதனச் சட்டக்கோவை 1961 ன் படி அமையும்.

(அ) ஒழுங்கணித் தலைவர் (ஸ்குவாட்றன்ட் லீடர்) வரையுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பொருத்தமான அடிப்படை வேதனம் பின்வருமாறு :—

விமானமோட்டும் உத்தியோகத்தர் : வருடத்திற்கு ரூபா 4,500.

வானூர்திப்படையில் பணி முதல்வர் : 2 வருட ஏற்றம் ரூபா 180 ம் ரூபா 360 ம் ஆக வருடமொன்றுக்கு ரூபா 4,860 லிருந்து ரூபா 5,580 ஆக உயர்வதாகும்.

விமானப்படைத் துணைத்தலைவர் : 180 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்கள் அமைந்து வருடமொன்றுக்கு ரூபா 6,660 லிருந்து ரூபா 7,740 ம் ஆக உயர்வதாகும்.

ஒழுங்கணித் தலைவர் : 180 ரூபா கொண்ட 6 படி ஏற்றங்கள் அமைந்து வருடமொன்றுக்கு ரூபா 8,820 லிருந்து ரூ. 9,900 ஆக உயர்வதாகும்.

(ஆ) **கோல உடைப்படி.**—பொறுப்பளிக்கும் போது வெப்பமண்டல உடைகளுக்காக ரூபா 650 படியாக வழங்கப்படும். வெளிநாடுகளில் சேவைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்பட்டால் மேலதிக உடைகளுக்கான படியாக ரூபா 1,300 வழங்கப்படும். இரண்டு வருட சேவைக் காலத்தை முடித்த பின்னர் ஒவ்வொரு மாதமும் ரூபா 25/– கோல உடையைப் பேணும் படியாக வழங்கப்படும்.

(இ) **ஏனைய படிகள்.**—வாழ்க்கைச் செலவுப்படி விசேட வாழ்க்கைச் செலவுப்படி, வாடகைப்படி ஆகியவை அரசாங்க விதிதப்படி வழங்கப்படும்.

7. இளைப்பாற்றுச் சம்பளம்/பணிக்கொடை ஆகியவை, 1962, செத்தம்பர் 14ல் 13,301ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டதுமான 1962 ம் வருட விமானப்படை இளைப்பாற்றுச் சம்பள பணிக்கொடைச் சட்டக் கோவையின் படி கொடுக்கப்படும். அரசின் கீழ் நிரந்தரமான, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள, தொடர்ச்சியான சேவையுள்ளது ; அல்லது, இலங்கைப் பாதுகாப்புப் படையில் அல்லது பிரித்தானிய பொது நலவாசின் கீழ் எழுந்த ஆயுத சேவையில் முன்னர் சேவை செய்திருந்தாலும் இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கப்படும்.

8. **சேவை நிபந்தனைகள் :**

1951 ம் ஆண்டு ஏப்ரல் 27 ம் திகதி 10,240 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட இலங்கை அரச விமானப்படை (ஒழுங்கான, ஒழுங்கான ஒதுக்கு)யின் பிரமாணங்களின் படி இலங்கை அரச விமானப்படையின் உத்தியோகத்தர்களுக்கான வாய்ப்புகளும் சேவைக்கால நிபந்தனைகளும் அமைந்திருக்கின்றன.

9. ஒரு தனி உத்தியோகத்தர் உத்தியோகத்தர்களுக்கான உணவுப் பந்தியில் வசிப்பதுடன் இருப்பிட வசதி, உணவு உழையர் சேவை ஆகியவை வழங்கப்படும். அத்தகைய காலப்பிரிவில் அவருக்கு வா. செ. படியும் வி. வா. படியும் வழங்கப்படமாட்டா.

10. விவாகம் செய்த உத்தியோகத்தருக்கு விவாகஞ் செய்தவர்களுக்கான குடிமனை (கிடைத்தால்) வழங்கப்படும். தனிப்பட்ட உழையருக்குப் பதிலாக ஒரு படியும் வழங்கப்படும்.

11. எந்த நேரத்திலும் உலகின் எந்தப் பாலத்திலும் கடமையாற்றவோ அன்றிப் பயிற்சிக்காகவோ விமானப்படை உத்தியோகத்தர்களை அனுப்பநேரிடலாம்.

12. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் 1956 ம் ஆண்டு 33 ம் இலக்கத்திலுள்ள ஆட்சிமொழிச் செய் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அரசாங்கத்தின் மொழிக் கொள்ளக்கு அவைவாகச் செய்யப்பட்டுள்ள அல்லது இனிமேல் செய்யப்படும் எந்த விதிகளுக்கும் அமைவாக நடக்க வேண்டுமென்று கோரப்படுவர்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர், தன்னுடைய அடிப்படை வேதனத்தில் 4% விகிதத்தை சேவையின் விதவை அநாதர் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு உதவு தொகையாகக் கொடுக்க இசைந்துள்ளதாக ஒரு கடிதத்தைக் கொடுக்க வேண்டுமென்று கோரப்படுவர்.

14. **அடிப்படைத் தேவைகள் :**—விண்ணப்பகாரர் பின்வரும் இன்றியமையாத தேவைகளை உடையோராக இருக்க வேண்டும்.

(அ) **தேசிய இனம்**

அபேட்சகர்கள் இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் :

(1) வம்சாவழியால் அல்லது.
(2) பதிவினால்.

(ஆ) **வயது**

அபேட்சகர்கள் 1969 யூன் 1 ந் திகதியில் 26 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கலாகாது.

(இ) **விவாகம்**

அபேட்சகர்கள் விவாகம் செய்யாதவர்களாக இருக்கவேண்டும். (பொறுப்பேற்ற நாளிலிருந்து இருவருடங்கள்வரை விவாகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.).

**குறிப்பு :**—உத்தியோகத்தர்கள் இலங்கையரல்லாதவர்களை விவாகம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். இலங்கையரல்லாதாரைத் திருமணம் செய்தால் அதன் பிரகாரம் பொறுப்பு நீக்கப்படக்கூடும் அல்லது பதவி ஏற்றங்கள் நிறுத்தப்படும்.

(ஈ) **கல்வி/உயர்தொழில் :**

அபேட்சகர்கள் பின்வரும் தராதரங்களில் ஒன்றை உடையவர்களென்பதற்கு திருப்திகாரமான சான்று காட்டவேண்டும் :

(i) **நிருவாக/சாதனக்கிளை :**

(அஅ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் ஒரு பட்டம்.

அல்லது

(ஆஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் (கலை அல்லது அறிவியல் தகுதிக்கான பொது அல்லது சிறப்புத் தேர்வு) முதல் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(இஇ) பொ. க. த. (உயர் தரம்) இல் ஒரே தடவையில், ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

(ஈஈ) விமானப்படைத் தளபதியின் அபிப்பிராயப்படி மேலேயுள்ள (அஅ, ஆஆ, இஇ) வாசகங்களுக்கு சமமான தராதரம் எதையும் பெற்றிருக்க வேண்டும்.

(ii) **தொழிநுட்ப (எந்திரவியல்) கிளை :—**

(அஅ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் எந்திரவியலில் அல்லது பௌதிகமும்/அல்லது கணிதவியலுடன் கூடிய அறிவியலில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். (அபேட்சகர்கள் பின் சொல்லப்பட்ட தராதரங்களில் ஏதோ ஒன்றைப் பெற்றிருந்தாலும், அவர்களுக்கு எந்திரவியல் தராதரம் அல்லது அனுபவம் இருப்பின் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவார்கள்.)

(ஆஆ) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் எந்திரவியலுக்கான முதல் பரீட்சையில் அல்லது அறிவியலில் (பொது அல்லது சிறப்பு) கணிதமும் பௌதிகமும் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(இஇ) இலண்டன் பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் இடைப் பரீட்சையில் அல்லது அறிவியலில் (கணிதமும் பௌதிகமும்) சித்தியடைந்திருக்கவேண்டும்.

அல்லது

(ஈஈ) விமானப்படைத் தளபதியின் கருத்துப்படி மேலே சொல்லப்பட்ட (அஅ,ஆஆ,இஇ) வாசகங்களுக்குச் சமமான வேறு எந்தத் தராதரமும் உடையவராக இருக்க வேண்டும்.

**(உஉ) வைத்திய நியமம் :**

அபேட்சகர்கள் விமானப்படையின் வைத்திய நியமங்களுக்குப் பொருத்தமாயிருக்க வேண்டும். (குறைந்த உயரம் 5 அடி 5 அங்குலம். மார்பு 32 அங்குலம் நிறை 105 இருத்தல்).

**விண்ணப்பகாரர்களுக்கான போதனைகள்**

15. விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலினுள்ள, பின்னிணைப்பு “ அ ” வினுள்ள படிவத்தில் செய்யப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களின் அச்சிட்ட பிரதிகள் ஒன்றும் கிடைக்கமாட்டா. விண்ணப்பகாரர்கள் தாங்களே சொந்தப் படிவங்களைத் தயார் செய்யுமாறு கேட்கப்படுகிறார்கள். சொல்லப்பட்ட படிவத்தைப் போலமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

16. பின்னிணைப்பு “ அ ”வில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் சாதாரண முழுத்தாள் அளவுள்ள ஒரு தாளில் பிரதி செய்யப்பட வேண்டும். எல்லா அடைப்புகளும் தெளிவான பெரிய எழுத்துக்களில் நிரப்பப்பட வேண்டும் அல்லது தட்டச்சில் பொறிக்கப்பட வேண்டும். ஒரு அடைப்பும் வெற்றாக விடப்படவோ அல்லது வெட்டப்படவோ கூடாது. விண்ணப்பத்தின் தலைப்பில் இரு அங்குல வெளியொன்று அலுவலக உபயோகத்திற்காக விடப்பட வேண்டும். விண்ணப்பத்தின் சகல பக்கங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு விண்ணப்பத்தின் படிவம் மேலே இருக்கவேண்டும்.

17. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் “ விமானப்படை ஏவுநர் ” இலங்கை அரச விமானப்படை, த. பெ. 594, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் “ விண்ணப்பம்—நிருவாக/சாதனக் கிளை, தொழிநுட்ப (எந்திரவியல்)கிளை உத்தியோகத்தர்கள் ” (தேவையற்றதை நீக்கி விடுக) என்று குறிப்பிடப்படவேண்டும். விண்ணப்பங்கள் 1969 யூன் 10 ந் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

18. விண்ணப்பங்களுடன் (மூலங்கள் அல்ல) கீழ்க்காணும் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) உயர்கல்வி/உயர் தொழிலுக்காகக் கிடைக்கப்பெற்ற தராதரச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பகாரருடன் நேரடியாகத் தொடர்புள்ள குறைந்தது, பொறுப்பான இருவரிடமிருந்து பெற்ற குணச்சான்றிதழ்கள்.

(ஈ) விண்ணப்பத்தில் ஏதாவது கோரினால் அதற்கு ஆதாரமாகச் சான்றிதழ்கள்.

19. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தருடைய விண்ணப்பங்கள் அதற்குரிய திணைக்களத் தலைவரினால் அனுப்பப்படவேண்டும். அவ் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் விடுதலை செய்யப்படுவாரென்பதற்கு ஒரு சான்றிதழும் அதனுடன் இருக்க வேண்டும்.

20. பந்திகள் 14 லுடனும் 18டேனும் முழுவதும் சரியாகப் பொருந்தி வராத விண்ணப்பங்கள் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

21. விண்ணப்பகாரர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவு நாடினால் அது தகைமை நீக்கமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**தேர்வுகள், நேர்முகப்பரீட்சை முதலியன**

22. விண்ணப்பம் கிடைத்ததும் ஒரு அபேட்சகர் பந்தி 14 ல் சொல்லப்பட்டபடி தேவையான தராதரமுடையவராயும், பொருத்தமானவரெனவும் காணப்பட்டால் அவர் **அவருடைய சொந்தச் செலவில்** ஒரு தேர்வுச் சபையின் முன் குறிப்பிட்ட இடத்திலும், தேதியிலும் நேரத்திலும் தோற்றவேண்டுமென்று அறிவுறுத்தப்படுவர்.

23. பிரவேச தேர்வுப் பரீட்சைச் சபையினால் உகந்தவரெனக் கருதப்பட்ட அபேட்சகர்கள், விமானப் படையினரால் வைத்திய பிரிசோதனை செய்யப்படுவார்கள். அத்துடன் இறுதி தேர்வுச் சபைக்கு முன், தியத்தலாவையிலுள்ள இலங்கை அரசவிமானப்படையில் உத்தியோகத்தருக்கான தன்மைப் பரீட்சைகளுக்கு ஆளாகுமாறு கோரப்படுவார்கள்.

24. பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சினால் நியமிக்கப்பட்ட சபையொன்றினால், இறுதித் தேர்வு நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் சபையினால் அறிவிக்கப்படுவார்கள். அவர்கள் பொறுப்பேற்க வேண்டிய அண்ணளவான தேதியும் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஈ. ஆர். அமரசேகரா,
விமான உதவி படைத்துறை பீயுயர் அலுவலர்.,
விமானப்படை ஏவுநர்.

விமானப்படைத் தலைமை அலுவலகம்,
இலங்கை அரச விமானப்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு, 1969 ம் ௵ எப்ரில் மீ 3 ந் உ.

## பின்னிணைப்பு “அ”

**இலங்கை அரச வான்படையின் .............பிரிவில் ............**

**ஆணைப்பதவிக்கான விண்ணப்பம்**

(விண்ணப்பம் செய்யும் கிளையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப்பெயர் :————.
வேறு பெயர்கள் :————.

2. தற்போதைய முகவரி :————.
(i) தொலைபேசி எண் :————.
(ii) அணித்தாயுள்ள புகையிரத நிலையம் :————.
(iii) அணித்தாயுள்ள பொலிசு நிலையம் :————.
(iv) தந்தி நிலையம் :————.

3. நிரந்தர வதிவிடம் :————.
இங்கு வாழ்ந்துவந்த காலம் :————.

4. விவாக நிலை : ————.

5. சமயம் : ————.

6. பெற்றோர் விபரம் :
(அ) தந்தையின் பெயர் :————.
பிறப்பிடம் : ————.
பிறப்பின்போது குடிமை :————.
(ஆ) தாயின் பெயர் :————.
பிறப்பிடம் :————.
பிறப்பின்போது குடிமை : ———— .

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள் :————.
(அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் :————.
(ஆ) சேர்ந்த திகதி :————.
(இ) விலகிய திகதி :————.

8. பள்ளிக்கூடம் விலகிய நாட்தொடக்கம் செய்த தொழில் விபரம்:——
(முழு விபரம் தருதல் வேண்டும்)
(அ) தொழில் கொடுத்தவரின் பெயர் :————.
(ஆ) தொழிலின் தன்மை :————.
(இ) தொழிலிலமர்ந்த காலம் :————.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதோர் பதவிக்கெனப் நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டீரா ? உமது விடை “ ஆம் ” எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரத்தையும் திகதியையும் தரவும் :————.

10. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தின் குற்றத்தீர்ப்புக்கு உட்பட்டீரா ? உமது விடை “ ஆம் ” எனின் விபரம் தருக :————.

11. இவ்வறிவித்தலின் 14 ஆம் பந்தியில் தேவையென வேண்டிப் பெற்ற தகைமைகள் :————.

12. பிறந்த திகதி :———— வயது :————. பிறப்பிடம் :————
குடிமை :————. பிறப்பின்போது :————
தற்சமயம் :————.
(அ) தகுதி :————.
(ஆ) உமது கல்வித் தகைமை :————
(அதாவது—நீர் தகைமைபெறும் 12 ஆம் பந்தியின் வாசகம்)
(இ) உயரம் : அடி :———— அங் :————.
(ஈ) மார்பு :———— அங். :————.
(உ) நிறை :———— இரு.:————.
மேலதிக தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளிற் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக் கூடியவர்களாகவிருத்தல் வேண்டும்) :————.

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனை விபரங்கள் :————.
(குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தராதரங்களையும் திகதிகளுடன் தருக)

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய வேறு சாதனைகள் :————.

15. ஏதாவது படைச்சேவையில், ஒழுங்கான அல்லது தொண்டர்படை அல்லது சாரணச் சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை விபரங்கள் :————.

16. விசேட தகைமைகள்பற்றிய விபரங்கள் :————.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) :————.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர் :————.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிற சாதனங்கள் :————

————,
(விண்ணப்பகாரரின் கையொப்பம்)

திகதி :————.

5—494/1—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,854

## இலங்கை அரச வான்படை உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

### பற்பிணி உத்தியோகத்தர்

இலங்கை அரச வான்படையில் ஒரு பற்பிணி உத்தியோகத்தரின் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகருக்கு இலங்கை அரச வான்படையில் வான் பிரதியாளன் ஆணைப்பதவி வழங்கப்படும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் வேண்டப்படும் பொழுது இலங்கையிலோ வெளிநாடுகளிலோ பயிற்சி பெற வேண்டப்படலாம்.

4. **சம்பளமும் படிகளும் :**

(அ) நியமனத்தின் பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரின் அனுபவத்திற்கேற்பக் கீழே கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான அளவில் அமர்த்தப்படுவார்.

(i) II ஆந்தரம்—ஆண்டிற்கு 5,160 ரூபாவிலிருந்து தொடங்கி ஒவ்வொன்றும் 360 ரூபாவான ஒன்பது வருடாந்த ஏற்றங்களும், ஒவ்வொன்றும் 480 ரூபாவான ஆறு வருடாந்த ஏற்றங்களும் பெற்று 11,280 ரூபாவில் இரண்டு ஆண்டு நிறுத்துகையுடன் 11,280 ரூபாவரை உயரும்.

(ii) I ஆந்தரம்—ஆண்டிற்கு 11,760 ரூபாவிலிருந்து தொடங்கி ஒவ்வொன்றும் 480 ரூபாவான மூன்று வருடாந்த ஏற்றங்கள் பெற்று 13,200 ரூபாவரை உயரும்.

(ஆ) II, I ஆந் தரங்கள் II ஆந் தரத்தின் உச்சச் சம்பளத்தில் இரண்டு ஆண்டு நிறுத்துகையுடன் ஒரு தொடர்ச்சியான கால அளவுத் திட்டத்தில் இருக்கும்.

**நன்கு கவனிக்குக :** சுகாதாரத் திணைக்களத்தின் மருத்துவ, பற்பிணி உத்தியோகத்தர்களின் மீளவாய்ந்த சம்பள அளவுத்திட்டங்கள் இலங்கை அரச வான்படைக்குப் பொருத்தமாயிருக்கும்பொழுது கைக்கொள்ளப்படும்.

(இ) பின்வரும் படிகளும் வழங்கப்படும் :—

(i) அரசாங்கக் குடிமனையில் வசிக்காதபொழுது அரசாங்க வீதப்படி வாடகைப்படி, உத்தியோகத்தர்களின் உணவு அரங்கில் வசிக்கும்படி வேண்டப்பட்டு இடவசதியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இப்படி வழங்கப்படமாட்டாது.

(ii) அரசாங்க வீதங்களின்படி வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப்படியும் மணமாகாத உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தர்களின் உணவு அரங்கில் இடவசதியளிக்கப்படும். அவர்களுக்கு அங்குவசிக்கும் காலத்தில் இப்படிகள் வழங்கப்படமாட்டா. ஆனால் அவர்களுக்கு வான்படை ஒழுங்குகளின்கீழ் இலவசமாக உணவளிக்கப்படும்.

(iii) மாதத்திற்கு 180 ரூபா வீதம் சேவைப்படி.

(iv) மாதத்திற்கு 75 ரூபா வீதம் தனிப்பட வேலையாளின் படி.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் உபகாரச் சம்பளத்திற்கும் அல்லது பணிக்கொடைக்கும் உரித்துடையவராவர். அத்தகைய உபகாரச் சம்பளத்தினை அல்லது பணிக்கொடையினைக் கணக்கிடும் முறை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆந் தேதிய உபகாரச் சம்பளம் பற்றிய குறிப்புகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவாகும். உயர்ச்சியின் எதிர்கால வாய்ப்புகள், சம்பளம், சேவை நிபந்தனைகள் சம்பந்தமான மேலதிகத் தகவல் கொழும்பு, பார்சன்ஸ் வீதியிலுள்ள இலங்கை அரச வான்படைத் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் சேவைகளின் விதவை அநாதர் உபகாரச்சம்பள நிதிக்கு அவருடைய உதவு தொகையாக அவருடைய அடிப்படைச் சம்பளத்தில் 4% கழிப்பதற்கு ஒரு இசைவுக்கடிதம் வழங்கும்படி வேண்டப்படுவர்.

7. **அடிப்படைத் தேவைகள் :**

விண்ணப்பகாரர்கள் பின்வரும் தேவைகளை உடையராயிருத்தல் வேண்டும்.

(அ) நாட்டினம் :— விண்ணப்பகாரர் :

(i) பரம்பரையாக அல்லது

(ii) பதிவு மூலமாக இலங்கைக் குடிகளாகவிருத்தல் வேண்டும்

(ஆ) வயது : அபேட்சகர்கள் 1969 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் தேதி அன்று, 33 வயதுக்கு மேற்படாதவர்களாக விருத்தல் வேண்டும்.

(இ) கல்வி/உயர்தொழில் : அபேட்சகர்கள் எல். டி. எஸ்., பீ. டி. எஸ். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பரீட்சிக்கும் சபையொன்றின் உயர்ந்த பற்பிணித் தகைமையுடையவர்களாகவும் பற்பிணி அறுவை வைத்தியராக இலங்கை மருத்துவச் சபையில் பதிவு செய்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

(ஈ) மருத்துவத்தரம் : விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவத் தரத்திற்கு இசைவான தரமுடையவர்களாகவிருத்தல் வேண்டும். (ஆகக்குறைந்த உயரம் 5 / அடி 5 அங்., மார்பு 32 அங்., நிறை 105 இருத்தல்கள்)

8. **விண்ணப்பக்காரர்களுக்கு அறிவுறுத்துரைகள் :**

இந்த அறிவித்தலின் "பின்னிணைப்பு அ" வில் காணப்படும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்ப மாதிரிப் படிவத்தில் அச்சிட்ட பிரதிகள் கிடைக்கமாட்டா. விண்ணப்பகாரர்கள் தங்களுடைய சொந்தப் படிவங்களைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். விதித்த படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. விண்ணப்பங்கள் "வான்படை ஏவுநர், இலங்கை அரசவான்படை, அ. பெ. 594, கொழும்பு" என்ற முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பற்பிணி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு யூன் 10 ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

10. விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பெறப்பட்ட ஆகக்கூடிய கல்வி/தொழிற்றகைமைச் சான்றிதழ் ;

(இ) குறைந்த பட்சம் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமுடைய பொறுப்புள்ளவர்கள் இருவரிடம் பெறப்பட்ட இரண்டு நற்குணச் சான்றிதழ்கள்;

(ஈ) விண்ணபத்தில் செய்யப்பட்டுள்ள ஏதாவது உரிமைக்கோரிக்கைக்கு ஆதாரமாகவுள்ள சான்றிதழ்கள்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செய்முறைப் படுதுவதன் பொருட்டு குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஆட்சி மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செய்முறைப்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்ட ஏதாவது விதிகளுக்கு அல்லது இதன்பின் செய்யப்படும் விதிகளுக்கு அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

12. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்கள், உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிக்கப்படுவாரா என்று கூறி அவரின் திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்பப்படல் வேண்டும்.

13. **தெரிவு, நேர்முகப் பரீட்சைகள் முதலியன :**

பெறப்படும் விண்ணப்பங்களின் தொகையைப் பொறுத்துத் தேவைப்பட்டால் மேலே குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடையேயிருந்து தொடக்கத் தெரிவொன்றை வான்படைச் சபையொன்று செய்யும். அதன்பின் அபேட்சகர்கள் ஆணைப்பதவி பெறுவதற்கு அவர்களுடைய தகுதியை மதிப்பிடுவதன் பொருட்டுச் சில சோதனைகளுக்கு உட்படுமாறு வேண்டப்படுவர். அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்களின் இறுதித்தெரிவு பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல் அமைச்சினால் நியமிக்கப்படும் ஒரு தெரிவுச் சபையினால் செய்யப்படும்.

14. அபேட்சகர்கள் நேர்முகப்பரீட்சைக்கு கொழும்பிற்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் நேரமும் திகதியும் இடமும் அவர்களுக்கு அஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். இத்தொடர்பில் அபேட்சகர்களினால் செலவழிக்கப்படும் பிரயாண அல்லது பிற செல்வுகள் வழங்கப்பட மாட்டா. நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படாத அபேட்சகர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படும்.

ஈ. ஆர். அமரசேகரா,
வான் துணைத்தளபதி, வான்படை ஏவுநர்.

வான்படைத் தலைமை அலுவலகம்,
அ. பெ. 594,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 3 ந உ.

## பின்னிணைப்பு "அ"

இலங்கை அரச வான்படையின்............பிரிவில்................

**ஆணைப்பதவிக்கான விண்ணப்பம்**

(விண்ணப்பம் செய்யும் இளையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப் பெயர் : ————.
   வேறு பெயர்கள் : ————.

2. தற்போதைய முகவரி : ————.
   (i) தொலைபேசி எண் : ————.
   (ii) அணித்தாயுள்ள புகையிரத நிலையம் : ————.
   (iii) அணித்தாயுள்ள பொலிசு நிலையம் : ————.
   (iv) தந்தி நிலையம் : ————.

3. நிரந்தர வதிவிடம் : ————.
   இங்கு வாழ்ந்துவந்த காலம் : ————.

4. விவாக நிலை : ————.

5. சமயம் : ————.

6. பெற்றோர் விபரம்—
   (அ) தந்தையின் பெயர் : ————.
   பிறப்பிடம் : ————.
   பிறப்பின்போது குடிமை : ————.
   (ஆ) தாயின் பெயர் : ————.
   பிறப்பிடம் : ————.
   பிறப்பின்போது குடிமை : ————.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள்—
   (அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் : ————.
   (ஆ) சேர்ந்த திகதி : ————.
   (இ) விலகிய திகதி : ————.

8. பள்ளிக்கூடம் விலகிய நாள்தொடக்கம் செய்த தொழில் விபரம் : (முழு விபரம் தருதல் வேண்டும்)
   (அ) தொழில் கொடுத்தவரின் பெயர் : ————.
   (ஆ) தொழிலின் தன்மை : ————.
   (இ) தொழிலிலமர்ந்த காலம் : ————.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதோர் பதவிக்கென நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டீரா ? உமது விடை "ஆம்" எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரத்தையும் திகதியையும் தரவும் : ————.

10. சிவில் அல்லது இராணுவ நீதி மன்றத்தின் குற்றத்தீர்ப்புக்கு உட்பட்டீரா ? உமது விடை "ஆம்" எனின் விபரம் தருக : ————.

11. இவ்வறிவித்தலின் 7 ஆம் பந்தியில் தேவையென வேண்டப் பெற்ற தகைமைகள் : ————.

12. பிறந்த திகதி : ————.
    வயது : ————.
    பிறப்பிடம் : ————.
    குடிமை : ————.
    பிறப்பின்போது : ————.
    தற்சமயம் : ————.
    (அ) தகுதி : ————.
    (ஆ) உமது கல்வித் தகைமை : ————.
    (அதாவது—நீர் தகைமை பெறும் 12 ஆம் பந்தியின் வாசகம்)
    (இ) உயரம் : அடி : ————. அங். : ————.
    (ஈ) மார்பு : ————அங்.
    (உ) நிறை : ————இரு.
    மேலதிக தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளிற் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக்கூடியவர்களாகவிருத்தல் வேண்டும்) : ————.

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனை விபரங்கள் : ————.
    (குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தராதரங்களையும் திகதிகளுடன் தருக)

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய வேறு சாதனைகள் : ————.

15. ஏதாவது படைச்சேவையில், ஒழுங்கான அல்லது தொண்டர்படை அல்லது சாரணச்சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை விபரங்கள் : ————.

16. விசேட தகைமைகள் பற்றிய விபரங்கள் : ————.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர் : ————.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிற சாதனங்கள் : ————

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5-494/2—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854.

---

## இலங்கை அரச வான்படை உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்

### மருத்துவ உத்தியோகத்தர்

1. இலங்கை அரச வான்படையில் மருத்துவ உத்தியோகத்தர் பதவியொன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகருக்கு இலங்கை அரச வான்படையில் வான் பிரதியாளன் என்ற இரமமான ஆணைப்பதவி வழங்கப்படும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் தேவைக்கேற்றபடி இலங்கையிலோ வெளிநாடுகளிலோ பயிற்சிபெற வேண்டப்படலாம்.

4. **சம்பளமும் படிகளும் :**

நியமனத்தின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அவரின் அனுபவத்திற்கேற்ப கீழே குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான அளவில் அமர்த்தப்படுவர்.

**(அ) சம்பள அளவுத்திட்டம் :**

(i) **தொடக்கத்தரம் :** ஆண்டிற்கு 5,880 ரூபாவிலிருந்து தொடங்கி 360 ரூபா வருடாந்த ஏற்றம் பெற்று ரூபா 6,240/- ஆக உயரும்.

(ii) **II ஆந் தரம்** ஆண்டிற்கு 6,960 ரூபாவிலிருந்து தொடங்கி ஒவ்வொன்றும் 360 ரூபாவான நான்கு வருடாந்த ஏற்றமும் ஒவ்வொன்றும் 480 ரூபாவான ஆறு வருடாந்த ஏற்றங்களும் பெற்று 11,280 ரூபா வரை உயரும்.

(iii) **I ஆந் தரம்** ஆண்டிற்கு 11,760 ரூபாவிலிருந்து தொடங்கி ஒவ்வொன்றும் 480 ரூபாவான மூன்று வருடாந்த ஏற்றங்கள் பெற்று 13,200 ரூபாவரை உயரும்.

(iv) **விசேடதரம்** ஆண்டிற்கு 13,800 ரூபாவிலிருந்து தொடங்கி ஒவ்வொன்றும் 600 ரூபாவான மூன்று வருடாந்த ஏற்றங்கள் பெற்று 15,600 ரூபாவரை உயரும்.

(ஆ) தொடக்கத்தரமும், II ஆந் தரமும், I ஆந் தரமும் II ஆந் தரத்தில் இரண்டு ஆண்டுகள் இடை நிறுத்தத்துடன் தொடர்ச்சியான கால அளவுத்திட்டத்தில் இருக்கும். விசேடதரம் ஒரு பதவியை மட்டும் கொண்டிருத்தல் வேண்டும்.

இப்பதவிக்கு வான்படை, தரைப்படை அல்லது கப்பற்படையிலுள்ள எந்தவொரு மருத்துவ உத்தியோகத்தரும்,

(i) அவருடைய முதுமுறை, ஆற்றல் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் இப்பதவிக்கு மிகவும் தகுதியானவரென்று கருதப்படுவதுடன்

(ii) பக்க அணி ஏவுநர், அறுவைவைத்தியர் : ஏவுநர், அல்லது பிரதி எஞ்தி வரிசைப் பதவிக்குக் குறையாத பதவி வகிப்பவராகவும்

(iii) I ஆந்தரத்தின் உச்சச்சம்பள அளவுத்திட்டத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்குச் சேவை புரிந்தவராகவும் இருக்கும் பட்சத்தில் நியமிக்கப்படலாம்.

(இ) பின்வரும் படிகளும் கொடுக்கப்படும்:—

(i) அரசாங்கக் குடிமனையில் வசிக்காதபொழுது அரசாங்க வீதங்களின் படி வாடகைப்படி வழங்கப்படும் உத்தியோகத்தர்களின் உணவு அரங்கில் வசிக்கும்படி வேண்டப்பட்டு இடவசதியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இப் படி வழங்கப்படமாட்டாது.

(ii) அரசாங்க வீதங்களில் வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப்படியும் மணமாகாத உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தர்களின் உணவு அரங்கில், இடவசதியளிக்கப்படும். அவர்களுக்கு அங்கு வசிக்கும் காலத்தில் இப்படிகள் வழங்கப்படமாட்டா. ஆனால் அவர்களுக்கு வான்படை ஒழுங்குகளின் கீழ் இலவசமாக உணவளிக்கப்படும்.

(iii) மாதத்திற்கு 180 ரூபா வீதம் சேவைப்படி.

(iv) மணம் முடித்து வெளியில் வசிப்பவராகவிருந்தால் மாத மொன்றிற்கு ரூபா 75/- வீதம் உறையுளின் படி கொடுக்கப் படும். உணவு அரங்கில் வசிப்பவருக்கு உறையுளின் சேவை இலவசமாக வழங்கப்படும்.

(v) கோலவுடைப்படி : ஆணைப்பதவி வழங்கப்படும் சமயத்தில் வெப்ப மண்டல உடைக்கான படியாக ரூபா 650/- வழங்கப் படும். சேவைக்கு அல்லது பயிற்சிக்கு வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்டால் உடைப்படிக்கென மேலும் ரூபா 1,300/- வழங்கப்படும்.

இரண்டு ஆண்டுகள் சேவை முடிந்தவிடத்து கோலவுடைகளைப் பேணுதலுக்கான படியாக மாதமொன்றுக்கு ரூபா 25/- வழங்கப்படும்.

(vi) பிரிந்திருக்கைப்படி, உணவுப்படி மற்றும் பிறபடிகளும் 1961 ம் ஆண்டின் வான் படை வேதனக் கோவையின்படி கொடுக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் உபகாரச் சம்பளத்திற்கும் பணிக் கொடைக்கும் உரித்துடையவராவர். அத்தகைய உபகாரச் சம்பளத்தினை அல்லது பணிக்கொடையினைக் கணக்கிடும் முறை அரசாங்க வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலால் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ஆந் தேதிய உபகாரச் சம்பளம் பற்றிய குறிப்புகளின் ஏற்பாடுகளுக்கிணங்கவாகும். உயர்ச்சியின் எதிர் கால வாய்ப்புகள், சம்பளம், சேவை நிபந்தனைகள் சம்பந்தமான விபரங்களைக் கொழும்பு, பார்சன்ஸ் வீதியிலுள்ள இலங்கை அரச வான்படைத் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. உயர்ச்சி வாய்ப்புகள், சம்பளம், சேவை நிபந்தனைகள் தொடர்பான மேலதிக தகவலைக் கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை யிலுள்ள இலங்கை அரச வான்படைத் தலைமை அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் சேவைகளின் விதவை அநாதர் உபகாரச் சம்பள நிதிக்கு அவருடைய உதவு தொகையாக அவருடைய அடிப்படைச் சம்பளத்தில் 4% கழிப்பதற்கு ஒரு இசைவுக் கடிதம் கொடுக்கும்படி வேண்டப்படுவர்.

8. **அடிப்படைத் தேவைகள்**

விண்ணப்பகாரர்கள் பின்வரும் தேவைகளையுடையவராயிருத்தல் வேண்டும் :—

(அ) தேசிய இனம் : விண்ணப்பகாரர்கள்—
(i) பரம்பரையாக அல்லது
(ii) பதிவுமூலமாக இலங்கைக் குடிகளாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது : விண்ணப்பகாரர்கள் 1969 ஆம் ஆண்டு யூன் 1 ஆந் தேதியன்று 32 வயதுக்கு மேற்படாதவர்களாகவிருத்தல் வேண் டும்.

(இ) உயர்தொழில் : இலங்கை மருத்துவத் தொழில் புரிவோருடன் பதிவு செய்திருத்தல் வேண்டும். மருத்துவத் திணைக்களத்தில் நிபுணத்துவ அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

(ஈ) மருத்துவத்தரம் :—விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவத் தரத்திற்கு இசைவான தரமுடையவர்களாகவிருத்தல் வேண்டும் (ஆகக் குறைந்த உயரம் 5 அடி 5 அங்., மார்பு 32 அங்குலம், நிறை 105 இறாத்தல்).

9. **விண்ணப்பக்காரர்களுக்கு அறிவுறுத்துரைகள்.**— இந்த அறிவித்த லின் " பின்னிணைப்பு அ " வில் காணப்படும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்ப மாதிரிப் படிவத் தின் அச்சிட்ட பிரதிகள் கிடையா. விண்ணப்பகாரர்கள் தங்களுடைய சொந்தப் படிவங்களைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். விதித்த படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலம் " வான்படை ஏவுநர், இலங்கை அரச வான்படை, அ. பெ. 594, கொழும்பு " என்ற முகவரி யிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் " என்று குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு யூன் 10 ஆந் திகதியன்று மத்தியானம் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.

11. விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகள் (மூலங்க ளல்ல) இணைக்கப்படல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) ஆகக்கூடிய உயர் கல்வித்தகைமைச் சான்றிதழ் / தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமுடைய பொறுப்புள்ளவர்கள் இருவரிடமாயினும் பெறப்பட்ட இரண்டு நற்குணச் சான்றிதழ் கள் ;

(ஈ) விண்ணப்பத்தில் செய்யப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கைக்கு ஆதார மாகவுள்ள சான்றிதழ்கள்.

12. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப் பங்களை சுகாதாரச் சேவைப் பணிப்பாளருக் கூடாக அனுப்புதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படுமிடத்து அந்த உத்தியோகத்தர் விடுவிக்கப்படுவார் என்று கூறும் சான்றிதழ் விண்ணப்பத்துடன் இருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செய்முறைப்படுத்துவதன் பொருட்டு விசேடமாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஆட்சிமொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செய்முறைப்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே செய்யப் பட்ட ஏதாவது விதிகளுக்கு அல்லது இதன்பின் செய்யப்படும் விதி களுக்கு அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

14. பந்திகள் 8 இலும் 11 இலும் கொடுக்கப்பட்ட தேவைகளுக்குப் பூரணமாக இணங்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தேடுவதற்கு எந்த வொரு முயற்சியும் செய்யப்படலாகாது என விண்ணப்பகாரர்களுக்கு விசேடமாக அறிவிக்கப்படுகின்றது.

16. **தெரிவுகள், நேர்முகப் பரீட்சைகள் முதலியன**

பெறப்படும் விண்ணப்பங்களின் தொகையைப் பொறுத்துத் தேவைப்பட்டால் மேலே குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர் களிடையேயிருந்து தொடக்கத் தெரிவொன்றை வான்படைச் சபை யொன்று செய்யும். அதன் பின் அபேட்சகர்கள் ஆணைப்பதவி பெறு வதற்கு அவர்களுடைய தகுதியை மதிப்பிடுவதன் பொருட்டுச் சில சோதனைகளுக்கு உட்படுமாறு வேண்டப்படுவர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் இறுதித் தெரிவு பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல் அமைச்சினால் நியமிக்கப்படும் ஒரு தெரிவுச் சபையினால் செய்யப்படும்.

17. அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்பிற்கு அழைக்கப் படுவர். நேர்முகப் பரீட்சையின் நேரமும் திகதியும் இடமும் அவர்களுக்கு அஞ்சல் மூலம் அறிவிக்கப்படும்.

இத்தொடர்பில் அபேட்சகர்களினால் செலவழிக்கப்படும் பிரயாண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா. நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படாத அபேட்சகர்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படும்.

ஈ. ஆர். அமரசேகரா,
வான்துணைத் தளபதி,
வான்படை ஏவுநர்.

வான்படைத் தலைமை அலுவலகம்,
இலங்கை அரசவான்படை,
அ. பெ. 594,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஏப்ரல் மீ 3 ந் உ.

பின்னிணைப்பு " அ "

**இலங்கை அரச வான்படையில்................பிரிவில்............**

**ஆணைப்பதவிக்கான விண்ணப்பம்**

(விண்ணப்பம் செய்யும் இனையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப் பெயர் :————.
வேறு பெயர்கள் :————.
தற்போதைய முகவரி :————.

2. (i) தொலைபேசி எண் :————.
(ii) அணித்தாயுள்ள புகையிரத நிலையம் :————.
(iii) அணித்தாயுள்ள பொலிசு நிலையம் :————.
(iv) தந்தி நிலையம் :————.

3. நிரந்தர வதிவிடம் :————.
இங்கு வாழ்ந்துவந்த காலம் :————.

4. விவாக நிலை :————.

5. சமயம் :————.

6. பெற்றோர் விபரம் :————

(அ) தந்தையின் பெயர் :————.
பிறப்பிடம் :————.
பிறப்பின்போது குடிமை :————.

(ஆ) தாயின் பெயர் :————.
பிறப்பிடம் :————.
பிறப்பின்போது குடிமை :————.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள் :————

(அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் :————.

(ஆ) சேர்ந்த திகதி :————.

(இ) விலகிய திகதி :————.

8. பள்ளிக்கூடம் விலகிய நாட்தொடக்கம் செய்த தொழில் விபரம் : ———.
(முழு விவரம் தருதல் வேண்டும்)
(அ) தொழில் கொடுத்தவரின் பெயர் :———.
(ஆ) தொழிலின் தன்மை :———.
(இ) தொழிலிலமர்ந்த காலம் :———.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதோர் பதவிக்கென நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டீரா ? உமது விடை " ஆம் " எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரத்தையும் திகதியையும் தரவும் :———.

10. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்புக்கு உட்பட்டீரா ? உமது விடை " ஆம் " எனின் விபரம் தருக :———

11. இவ்வறிவித்தலின் 8 ஆம் பந்தியில் தேவையென வேண்டப்பெற்ற தகைமைகள் :———.

12. பிறந்த திகதி :———. வயது :———. பிறப்பிடம் :——— குடிமை :———. பிறப்பின்போது :———. தற்சமயம் :———.
(அ) தகுதி :———.
(ஆ) உமது கல்வித் தகைமை :———.
(அதாவது—நீர் தகைமைபெறும் 12 ஆம் பந்தியின் வாசகம்)
(இ) உயரம் :— அடி :———. அங். :———.
(ஈ) மார்பு :———அங்.
(உ) நிறை :———இரு.
மேலதிக தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளிற் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக்கூடியவர் களாகவிருத்தல் வேண்டும்) :———.

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனை விபரங்கள் :———.
(குழுமங்கள், போட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தராதரங் களையும் திகதிகளுடன் தருக)

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய வேறு சாதனைகள் :———.

15. ஏதாவது படைச்சேவையில், ஒழுங்கான அல்லது தொண்டர்படை அல்லது சாரணச் சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை விபரங்கள் : ———.

16. விசேட தகைமைகள் பற்றிய விபரங்கள் :———.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) :———.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர் :———.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிற சாதனங்கள் :———.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :———.——.

5-494/3—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## இலங்கை அரச வான்படை

### உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் வான்படைக்கள அமைத்தற் பிரிவு (வேலைச் சேவைகள்)

இலங்கை அரச வான் படையின் வான்படைக்கள அமைத்தற் பிரிவின் (வேலைச் சேவைகள்) இரண்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங் கள் கோரப்படுன்றன.

2 சேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு ஓர் ஆணைப் பதவி இலங்கை அரச வான்படையில் வழங்கப்படும். 13 ஆம் பந்தியின் கீழ் துணைப் பந்தி (சி) (i) தொடக்கம் (iii) வரை பட்டியற்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளையுடைய வேட்பாளர்கள் வான் பிரதியாளர் ஆணைப் பதவியில் நியமனம் வழங்கப்படுவர். 13 ஆம் பந்தியின் கீழ் துணைப் பந்தி (சி) (iv) தொடக்கம் (vi) வரை பட்டியற்படுத்தப்பட்ட கல்வித் தகைமைகளையுடைய ஏனைய வேட்பாளர்கள் வழிகாட்டி உத்தியோகத்தர் பதவியில் நியமனம் வழங்கப்படுவர்.

3. வான்படைக்கள அமைப்புப் பிரிவின் ஓர் உத்தியோகத்தரின் கடமைகளாவன (எல்லா உத்தியோகத்தர்களினதும் நாளாந்தக் கடமை கள் நீங்கலாக) வான்படைக் களம் வான்படையால் பாவிக்கப்பட்டும் செயற்படுத்தப்பட்டும் வரும் கட்டங்கள், சாலைகள் குடியிருக்கும் பிற புத்தமர்வுகள் போன்றவற்றை அமைத்தலும் பேணுதலுமாகும்.

4. தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் இலங்கையிலோ வெளிநாட்டிலோ பயிற்சி மேற்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**வேதனமும் படிகளும் :**

5. வேதனமும் படிகளும் 1961 ஆம் ஆண்டின் வான்படை வேதனக் கோவையின் படி 1961 ஆண்டு ஏப்பிரில் மாதம் 28 ஆம் திகதி வெளிவந்த 12,395 ஆம் இலக்கத்திய இலங்கை கசற் பத்திரி கையில் உள்ளதைப் போன்றும், காலத்திற்குக் காலம் மாற்றி அமைப்பதைப் போன்றும் அமையும்.

(அ) பக்க அணி ஏவுனர் பதவி வரையான உத்தியோகத்தர்களுக் கான அடிப்படை வேதனம் பின்வருமாறு:—

வழிகாட்டி உத்தியோகத்தர்—

ஆண்டொன்றுக்கு ரூபா 4,500.

வான் உத்தியோகத்தர்—

ஆண்டொன்றுக்கு ரூ. 4,860 ல் தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூ. 180 கொண்ட இரண்டு ஏற்றங்களின் மூலமும் ரூ. 360 கொண்ட ஒரு ஏற்றம் மூலமும் ரூ. 5,580 வரை செல்லும்.

வான் பிரதியாளர்—

ஆண்டொன்றுக்கு ரூ. 6,660 தொடங்கி ஆண்டுக்கு ரூ. 180 கொண்ட ஆறு ஏற்றங்களாக ஆண்டுக்கு ரூ. 7,740 வரை உயரும்.

சதுரணித் தலைவர்—

ஆண்டொன்றுக்கு ரூ. 8,820 தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூ. 180 கொண்ட ஆறு ஏற்றங்களாக ஆண்டுக்கு ரூ. 9,900 வரை உயரும்.

(ஆ) கோலவுடைப்படி : ஆணைப்பதவி வழங்கப்படும் சமயத்தில் வெப்ப மண்டல உடைக்கான படியாக ரூ. 650 வழங்கப்படும் சேவைக்கு அல்லது பயிற்சிக்கென வெளிநாட்டுக்கு அனுப்பப் பட்டால் உடைப்படிக்கென மேலும் ரூ. 1,300 வழங்கப்படும். இரண்டு ஆண்டுகள் சேவை முடிந்தவிடத்து கோலவுடைகளைப் பேணுதலுக்கான படியாக மாதமொன்றுக்கு ரூ. 25 வழங்கப் படும்.

(இ) பிறபடிகள் : வாழ்க்கைச் செலவுப்படி, வாழ்க்கைச் சிறப்புப்படி, வாடகைப்படி. யாவும் அரசாங்க வீதப்படி கொடுக்கப்படும்.

6. உபகாரச் சம்பளம்/பணிக்கொடை என்பன 1962 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் தேதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 13,301 இலக்க வான்படை உபகாரச்சம்பளமும் பணிக் கொடையினதும் கோவை 1962 க்கு ஏற்பவும் காலத்திற்குக் காலம் மாற்றப்படும் நியதிகளுக்கேற்பவும் வழங்கப்படும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமாக, உபகாரச் சம்பளம் பெறும் தொடர்ச்சியான சேவையில் அல்லது இலங்கையின் பாதுகாப்புப் படையில் முன்பு சேவைசெய் திருந்தால் அல்லது பிரித்தானிய பொதுநல போர்ச் சேவையில் இருந் திருப்பின் இவர் உபகாரச் சம்பளம் பெறுவதற்குரித்துடையவராவர்.

**சேவை நிபந்தனைகள் :**

7. இலங்கை அரச வான்படை உத்தியோகத்தரின் சேவை நிபந்தனை கள் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டனவும் 1951 ஆம் ஆண்டு ஏப்பிரில் 27 ஆம் தேதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 10,240 ஆம் இலக்க இலங்கை அரச வான்படை (ஒழுங்கானதும் ஒழுங்கான ஒதுக்க மும்) பிரமாணங்களின் படியாகும்.

8. மணம் முடிக்காத உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகத்தர் களுக்கான உணவு அரங்கில் வசிப்பார் ; அங்கு வசிப்பிட வசதி, உணவு வேலையாளரின் சேவை என்பன அளிக்கப்படும்.

9. மணம் முடித்த உத்தியோகத்தருக்கு மணம் முடித்தவர் களுக்கான இருப்பிடமும் (கிடைக்கக்கூடியதாயிருப்பின்) கொடுத்துதவப் படும் ; அத்துடன் தனிப்பட்ட வேலையாளுக்குப்பதிலாக ஒரு படியும் வழங்கப்படும்.

10. வான்படை உத்தியோகத்தர்கள் எந்தநேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் கடமை புரிவதற்கு இல்லது பயிற்சிக்கென அனுப்பப் படுவதற்குரியவராவர்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செய்முறைப்படுத்துவதன் பொருட்டு 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஆட்சி மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செய் முறைப்படுத்துவதன் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்ட ஏதாவது விதிகளுக்கு அல்லது இதன்பின் செய்யப்படும் விதிகளுக்கு அமைய நடக்குமாறு வேண்டப்படுவர்.

12. சேவைகளின் கைம்பெண் அனாதைகள், இளைப்பாற்றிச்சம்பளத் தின் பொருட்டு தமது அடிப்படைச் சம்பளத்திலிருந்து 4% கழிக்கப் படுவதற்கான சம்மதத்தைத் தெரிவிக்கும் விதத்தில் ஓர் கடிதம் கொடுக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர் வேண்டப்படுவர்.

**அடிப்படைத் தேவைகள் :**

13. கீழ்வரும் தேவைகளை விண்ணப்பகாரர்கள் உடையவராயிருத்தல் வேண்டும் :—

(அ) நாட்டினம்—வேட்பாளர்கள் இலங்கைக் குடிகளாயிருத்தல் அவசியம்—
 (i) பிறப்பினாலா அல்லது
 (ii) பதிவினாலா

(ஆ) வயது—வேட்பாளர்கள் 1969 ம் ஆண்டு யூன் மாதம் 1 ந் திகதி அன்று 33 வயதுக்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும் ;

(இ) கல்வி/உயர்தொழில்—வேட்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ள ஏதாவதொரு தகைமையுடையவரென்பதை நிரூபிக்கும் வகையில் நிறைவான அத்தாட்சி காட்ட வேண்டியவராவார்.

 (i) ஏ. எம். ஐ. சி. ஈ., ஏ. எம். ஐ. ஈ. ஈ., அல்லது ஏ. எம். ஐ. மெக். ஈ. ;
 அல்லது

 (ii) நன்குமதிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தின் எந்திரவியற் பட்டதாரியாயிருத்தல் வேண்டும்.

 (iii) சித்திகரமான முறையில் ஏ. எம். ஐ. சி. ஈ., ஏ. எம். ஐ. ஈ. ஈ., அல்லது ஏ. எம். ஐ. மெக். ஈ. பாகம் I ம் II ம் (அல்லது பிரிவுகள் ஏ அல்லது பி) பரீட்சைகளுக்கான பயிற்சி மேற்கொண்டு சிவில் மின் அல்லது எந்திரவியல் எந்திரிகள் தாபனத்தால் அத்தாபனத்தின் II ஆம் பாகத்துக்கு (அல்லது பி பிரிவுக்கு) தோற்றுவதற்கு உத்தரவு அளிக்கப்பட்டவர் ; வேறு பிரத்தியேக தகைமைகள் அல்லது அனுபவம் உடையவராய் வேட்பாளர் இருப்பின் மேற்கூறிய தகைமைகளையுடைய வேட்பாளர்களுக்கு சலுகை காட்டப்படும்.

 (iv) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியில் சிவில், மின் அல்லது எந்திரவியலில் டிப்புளோமா பெற்று 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் அரசாங்கத்தில் அல்லது மதிப்புப் பெற்ற எந்திரவியற்தாபனத்தில் அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும் ;
 அல்லது,

 (v) கனிட்ட தொழினுட்ப உத்தியோகச் சான்றிதழ் (சிவில்) அல்லது (எந்திரவியலும் மின்வலுவும்) பெற்று 5 ஆண்டுகளுக்குக் குறையாமல் பெரிய ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் கட்டட வேலையில் அல்லது நன்மதிப்புப் பெற்ற எந்திரவியற் தாபனத்தின் கட்டட வேலையில் வேலை அனுபவம் பெற்றவராயிருத்தல் வேண்டும் ;

 (vi) எந்திரத்தொழிலில் ஈடுபாடுள்ள தாபனத்தின் கூட்டுப் பகுதி I (பிரிவு அ) சித்தியெய்தியவராயும் 5 ஆண்டு வேலை அனுபவம் அரசாங்க எந்திரவியல் வேலையில் அல்லது மதிப்புப்பெற்ற எந்திரவியற் தாபனத்தில் பெற்றவராயுமிருத்தல் வேண்டும். (மேலே சொல்லப்பெற்ற தொழினுட்பத் தகைமைகளுடன் சேர்த்து அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது மதிப்புப்பெற்ற எந்திரவியற் தாபனத்தின் வேலை அனுபவம் பெற்றவர்களுக்குப் பொதுத் தகுதியின்படி முன்னுரிமை அளிக்கப்படும்).

(ஈ) **மருத்துவ நியமம் :** வான்படை மருத்துவ நியமங்களுக்கு வேட்பாளர்கள் அமைந்திருத்தல் வேண்டும் (ஆகக்குறைந்த உயரம் 5 அடி, 5 அங்., மார்பு 32 அங்குலம் ; நிறை 105 இருத்தல்.

**விண்ணப்பகாரர்களுக்கான அறிவுறுத்தல் :**

14. இவ்வறிவித்தலின் பின்னிணைப்பு " ஏ " யில் உள்ள படிவத்திலேயே விண்ணப்பங்கள் யாவும் செய்யப்படவேண்டும் அச்சிடப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் கிடையா. விண்ணப்பகாரர்களே தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும். இதற்கெனக் குறிப்பிடப்பட்ட படிவத்திற்கியைய அமையாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

15. விண்ணப்பங்கள் யாவும் " வான்படைத் தளபதி த. பெ. எண் 594, கொழும்பு " என முகவரியிடப்பட்டுக் கடித உறையின் இடது பக்க மூலையில் " விண்ணப்பம்—வானூர்தித் தள அமைப்புக்கிளை—உத்தியோகத்தர் " என எழுதப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ந் தேதி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

16. 12 ஆம் பத்தியில் உள்ளதைப் போன்று வேட்பாளர்கள் தகைமைகளில்லாதிருப்பின் எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பங்கள் கருதப்படமாட்டா.

17. விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பவேண்டிய பிரதிகள் :—

(அ) விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) உயர் கல்விச் சான்றிதழ்/பெற்ற உயர் தொழிற் தகைமைச் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் நெருங்கிப் பழகிய இரண்டு பொறுப்பு வாய்ந்தவர்களிடம் பெற்ற சான்றிதழ் ;

(ஈ) விண்ணப்பத்தில் செய்யப்பட்ட கோரிக்கைகளை ஆதரிக்கும் வகையில் சான்றிதழ்கள்.

18. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் யாவும் திணைக்களத்தின் தலைவரூடாக, அவ் உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்படின் விடுவிக்கப்படுவாரா எனக் குறிப்பிட்டு, அனுப்பப்படுதல் வேண்டும்.

**தெரிவு, நேர்முகப்பரீட்சை போன்றவை :**

19. பொருத்தமுடையவரெனக் காணப்படும் வேட்பாளர் ஒரு தெரிவுச் சபை முன் அவரது சொந்தச் செலவில் தோன்றும்படி அறிவுறுத்தப்படுவர்.

20. தொடக்கத்தெரிவுச் சபையினால் பொருத்தமெனக் காணப்படும் வேட்பாளர்கள் வான்படையினால் மருத்துவச் சோதனைக்குட்படுத்தப்படுவர். உத்தியோகத்தர் முடிவான தெரிவுச்சபை முன் போவதற்கு முன் தன்மைச் சோதனைக்கும் உட்படுத்தப்படுவர்.

ஈ. ஆர். அமரசேகரா,
வான்துணைத் தளபதி,
வான்படை ஏவுனர்.

வான்படைத் தலைமை நிலையம்,
த. பெ. எண். 594,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 3 ம் உ.

பின்னிணைப்பு " அ "

**இலங்கை அரச வான்படையின்..............பிரிவில்..............**

**ஆணைப்பதவிக்கான விண்ணப்பம்**

(விண்ணப்பம் செய்யும் கிளையின் பெயரை எழுதவும்)

1. குடும்பப் பெயர் : ————.
 வேறு பெயர்கள் : ————.

2. தற்போதைய முகவரி : ————.
 (i) தொலைபேசி எண் : ————.
 (ii) அணித்தாயுள்ள புகையிரத நிலையம் : ————.
 (iii) அணித்தாயுள்ள பொலிசு நிலையம் : ————.
 (iv) தந்தி நிலையம் : ————.

3. நிரந்தர வதிவிடம் : ————.
 இங்கு வாழ்ந்துவந்த காலம் : ————.

4. விவாக நிலை : ————.

5. சமயம் : ————.

6. பெற்றோர் விபரம் —
 (அ) தந்தையின் பெயர் : ————.
 பிறப்பிடம் : ————.
 பிறப்பின்போது குடிமை : ————.
 (ஆ) தாயின் பெயர் : ————.
 பிறப்பிடம் : ————.
 பிறப்பின்போது குடிமை : ————.

7. பள்ளிக்கூட, பல்கலைக்கழக வாழ்க்கை விபரங்கள் —
 (அ) பள்ளிக்கூடத்தின் பெயரும் பிறவும் : ————.
 (ஆ) சேர்ந்த திகதி : ————.
 (இ) விலகிய திகதி : ————.

8. பள்ளிக்கூடம் விலகிய நாட்தொடக்கம் செய்த தொழில் விபரம் : ————. (முழு விபரம் தருதல் வேண்டும்)
 (அ) தொழில் கொடுத்தவரின் பெயர் : ————.
 (ஆ) தொழிலின் தன்மை : ————.
 (இ) தொழிலிலமர்ந்த காலம் : ————.

9. இதற்கு முன்பு எப்போதாவது படைச்சேவை ஏதாவதொன்றில் ஏதாவதோர் பதவிக்கென நேர்முகப் பரீட்சை செய்யப்பட்டீரா ? உமது விடை " ஆம் " எனின் விண்ணப்பித்த பதவிகளின் விபரத்தையும் திகதியையும் தரவும் : ————.

10. சிவில் அல்லது இராணுவ நீதி மன்றத்தின் குற்றத்தீர்ப்புக்கு உட்பட்டீரா ? உமது விடை " ஆம் " எனின் விபரம் தருக : ————.

11. இவ்வறிவித்தலின் 13 ஆம் பந்தியில் தேவையென வேண்டப்பெற்ற தகைமைகள் : ————.

12. பிறந்த திகதி : ————.
வயது : ————.
பிறப்பிடம் : ————.
குடிமை : ————.
பிறப்பின்போது : ————.
தற்சமயம் : ————.

(அ) தகுதி : ————.

(ஆ) உமது கல்வித் தகைமை : ————.
(அதாவது—நீர் தகைமைபெறும் 12 ஆம் பந்தியில் வாசகம்)

(இ) உயரம் : ————. அடி. . . . . அங். . . . .

(ஈ) மார்பு : ————. அங்.

(உ) நிறை : ———— இரு.
மேலதிக தகைமைகள் (விண்ணப்பகாரர்கள் பின்வரும் கூடுகளிற் செய்யும் கோரிக்கைகளை உறுதிப்படுத்தக்கூடியவர்களாகவிருத்தல் வேண்டும்)

13. விளையாட்டுகளில் ஈட்டிய சாதனை விபரங்கள் : ————.
(குழுமங்கள், பேர்ட்டிகள் பற்றிய விபரங்களையும் ஈட்டிய தராதரங்களையும் திகதிகளுடன் தருக)

14. பள்ளிக்கூடத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் ஈட்டிய வேறு சாதனைகள் : ————.

15. ஏதாவது படைச்சேவையில், ஒழுங்கான அல்லது தொண்டர்படை அல்லது சாரணச்சிறுவர் அமைப்பில் ஆற்றிய சேவை விபரங்கள் : ————.

16. விசேட தகைமைகள் பற்றிய விபரங்கள் : ————.

17. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவைகள் (படிகள் மட்டுமே இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.

18. சான்றிதழ்கள் கொடுத்தவர்கள் பெயர் : ————.

19. இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பிற சாதனங்கள் : ————

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5–494/4—15.5.69 நதிகதிய வர்த்தமானி இல. 14,854

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

ஈ 5/68.

## தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சகர்களாக நியமிப்பதற்குப் பரீட்சார்த்திகளைத் தெரிவுசெய்தல்—1969

1. (அ) தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கென 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி தகைமைகாண் எழுத்துப் பரீட்சையொன்று கொழும்பில் நடைபெறும். இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளமுடையனவுமாகும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

(ஆ) நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை நாலென மதிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் நலத்துக்காக அவசியமென்று கருதின் வெற்றிடங்கள் நிரப்புவதை அரசாங்க சேவை அதிகாரசபை தவிர்க்கவும் கூடும்.

2. **விண்ணப்பிக்கும் முறை**—(அ) விண்ணப்பப் படிவங்களை பரீட்சை ஆணையாளரிடமிருந்து 1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி முதல் 1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவங்களைப் பெறுவதற்கு சொந்த முகவரியிடப்பட்ட, முத்திரையில்லாத, அளவில் 9″ × 4″க்குக் குறையாத தபாலுறையினை அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடதுபுற மேற்பக்கத்தில் “ தகுதிகாண்நிலை உதவிப் பொலிசு அத்தியட்சருக்கான பரீட்சை ” என எழுதப்பட்டிருக்கவேண்டும். ஒரு விண்ணப்பதாருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா.

(ஆ) பரீட்சைக்கான விண்ணப்பங்களை 1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ளவர்களது விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். பரீட்சை ஆணையாளரது அல்லது அவரது திணைக்களத்திலுள்ள வேறு யாராவது உத்தியோகத்தரது சொந்த முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகாது. விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் தபாலுறையின் மேற்பக்க இடதுபுறத்தில் “ தகுதிகாண் நிலை உதவிப் பொலிசு அத்தியட்சருக்கான பரீட்சை ” என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவங்கள் எல்லா வகையிலும் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேட்கப்பட்டிருக்கும் எல்லா விபரங்களும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டிராவிடில், அதிலடங்கியுள்ள விபரங்களை கருத்திற்கொண்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட இடமுண்டு.

(ஈ) விண்ணப்பப் படிவம் தபாலில் காணுமற்போனமை, அல்லது தாமதமானவை போன்ற முறைப்பாடுகள் கவனிக்கப்படமாட்டா. கடைசி சில தினங்கள் வரை விண்ணப்பப் படிவங்கள் அனுப்புதலை தாமதமாக்குவதினால் ஏற்படக்கூடிய நஷ்டங்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க நேரிடும்.

(உ) விண்ணப்பப் படிவங்களிலிருந்து கிழித்தெடுக்கக் கூடிய அச்சிடப்பட்ட அஞ்சல் அட்டையில் பரீட்சார்த்திகள் தமது பெயரையும் முகவரியையும் மட்டுமே குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமையை அறிவிப்பதற்கு இவை உபயோகிக்கப்படும். இம்முறையை அனுட்டிக்காத பரீட்சார்த்திகளுக்கு அவரவர் விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இம்முறையை அனுட்டித்தும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொண்ட கடைசித் தினத்திலிருந்து மூன்று வாரங்களுக்குக்குள் தத்தமது விண்ணப்பங்கள் கிடைத்தது பற்றி அறிவிப்பு இட்டாத பரீட்சார்த்திகள், இது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். இப்பிரமாணத்தை அனுட்டிக்கத் தவறும் பரீட்சார்த்தியைப்பற்றி கவனஞ் செலுத்துவது சம்பந்தமாக பரீட்சார்த்திக்குள்ள உரிமை இல்லாமற் போகும்.

(ஊ) பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களை வேண்டப்படும் போது சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவர் :—

(1) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (உதவிபெறும் பாடசாலைகள் சம்பந்தமான நீதிப்பிரமாணங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்.

(3) பாடசாலையிலிருந்து பெற்ற அத்தாட்சிப் பத்திரத்துடன் நானுக்கு மேற்படாத அத்தாட்சிப் பத்திரங்கள். இவைகளில் குறைந்தது ஒன்ருவது பரீட்சார்த்தியின் கல்வி அல்லது கல்லூரிப் போதனசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

3. **பரீட்சைக்குத் தோற்ற அனுமதி**.—(i) விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்ற சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சார்த்திகள் அனுமதிப் பத்திரங்களைப் பரீட்சை நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள மேற்பார்வையாளரிடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பரீட்சார்த்திகள் இப் பரீட்சை எடுக்க தகுதியற்றவராவர்.

பரீட்சார்த்திகள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபங்களிலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எந்தப் பரீட்சார்த்தியும் அவருக்கொதுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த எந்தவொரு மண்டபத்துள்ளும் அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை நடைபெறும் தினம் தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளருக்குக் காட்ட வேண்டும். இவ்வறிவித்தலின் முடிவில் இப்பரீட்சைக்கு தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் அனுசரிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சகல பரீட்சார்த்திகளும் இவ்விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்களாவர்.

பரீட்சை நடைபெறும் தினத்திலிருந்து 10 நாட்களுக்கு முன்பாவது தமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாத பரீட்சார்த்திகள், அதனை உடனே பரீட்சை ஆணையாருளக்கு, த. பெ. 1503, கொழும்பு 2 என்ற முகவரிக்கு (தந்தி : “ எக்சாம்ஸ் கொழும்பு ”) அறிவிக்க வேண்டும். இதனை அறிவிக்கும்பொழுது, கீழ்க்காணும் தகவல்களும் கொடுக்கப்பட வேண்டும் :—

1. பரீட்சையின் பெயர் ;
2. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
3. முகவரி ;
4. தபாற்கந்தோர், தபாற் பதிவு இலக்கம், விண்ணப்பம் தபாலிலிடப்பட்ட திகதி என்பன.

(ii) பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுதல் தகைமைகளுடையவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதென கருதப்படலாகாது.

பரீட்சை ஆணையாளர் எந்தப் பரீட்சார்த்தியையும் தனது தற்றுணிபின்படி, அப்போதைக்கு பரீட்சைக்கு அனுமதிக்கலாம். அவ்வனுமதி பின்பு நிராகரிக்கப்படலாம் ; அல்லது அங்கீகரிக்கப்படலாம்.

4. **தகைமைகளுக்கான நிபந்தனைகள் :—**

(i) இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் ஆண்களாகவும் இலங்கையராகவும் இருக்க வேண்டும். இப்பரீட்சையின் பொருட்டு இலங்கையர் என்பவர் வம்சாவழியாகவோ பதிவு மூலமாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும் ;

(ii) பரீட்சார்த்திகள் 1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி 22 வயதை அடைந்தவராகவும் அல்லது 26 வயதை அடையாதவராகவும் இருக்கவேண்டும் ;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும் ;

**குறிப்பு.**—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்ற, 30 வயதுக்கு மேற்படாத, குறைந்தது 3 வருடங்களாவது பணிபுரிந்த பொலிஸ் பரிசோதகர்களும், உதவிப் பொலிஸ் பரிசோதகர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். அப்படியான விண்ணப்பதாரிகள் இரு முறை மாத்திரமே இப்பரீட்சைக்குத் தோற்றலாம். இவர்களைப் பொறுத்தவரை விவாகம் ஒரு தகுதியின்மையாகாது ;

(iv) நல்லொழுக்கம் உடையவராக இருக்க வேண்டும் ;

(v) விவாகமாகாதவராக இருக்க வேண்டும் ;

(vi) சிறந்த உடலமைப்பு உடையவராகவும், இத்தீவில் எப்பகுதியிலும் சேவை புரிவதற்கேற்ற தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும் ;

(vii) அவரின் கண்பார்வையின் ஆகக்குறைந்த அளவு 6/6 ஆகவும் 6/12 ஆகவும், நிறப்பார்வை சாதாரணமாகவும் இருக்க வேண்டும்.

கண்ணாடிகள் உபயோகிக்கவேண்டிய பரீட்சார்த்திகள் தகுதியற்றவராவர்.

5. **பரீட்சைத் திட்டம்.**—தகைமைகாண் எழுத்துப் பரீட்சைக்காய விடயங்களும், ஒதுக்கப்பட்ட புள்ளிகளும் பின்வருமாறு :—

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | வியாசமும் சுருக்கமும் .. .. | 150 |
| 2. | பொது அறிவு .. .. .. | 150 |
| 3. | இலங்கையின் சமூக அரசியல், பொருளாதார அபிவிருத்தி | 150 |

பரீட்சார்த்திகள் தங்கள் விருப்பப்படி இவ்வினாத்தாள்களுக்குரிய விடைகளைச் சிங்களம், அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுத அனுமதிக்கப்படுவர். விண்ணப்பமுடிவு திகதிக்குப் பின் குறிப்பிட்ட பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வினாத்தாளும் இரண்டு மணித்தியால நேரமுடையதாகும். பாடத்திட்டம் பின்வருமாறு :—

வியாசமும் சுருக்கமும்—குறிப்பான பல விடயங்களுள் ஒன்றைப் பற்றி ஒரு வியாசம் எழுதுதலும், வசன நடையிலுள்ள பந்திகளில் ஒன்றோ அதற்கு மேற்பட்டவையோ பரீட்சார்த்தியின் சொந்த வசனங்களில், ஆனால் மிகவும் சுருக்கமாக, எடுத்துரைத்தலும், மொழியின் அமைப்பு ஒழுங்கு ஆகியவற்றிலிருந்தும், விடயத்தைக் கையாளும் முறையிலிருந்தும் வியாசம் மதிப்பிடப்படும்.

பொது அறிவு—வினாத்தாள் பரீட்சார்த்தியின் பொது அறிவைச் சோதிப்பதற்கென அமைக்கப்படும். இதற்கென விசேடமான பாடத்திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

இலங்கையின் சமூக அரசியல், பொருளாதார அபிவிருத்தி—விசேடமாக நவீன இலங்கை பற்றிய குறிப்புடன் சமூக அரசியல், பொருளாதார அபிவிருத்தி பற்றியதாகும். இதற்கென விசேட பாடத்திட்டம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

6. தகைமைகாண் எழுத்துப் பரீட்சையைத் தொடர்ந்து பின்வரும் பரீட்சைகள் நடைபெறும்—

(அ) ஒரு பூர்வாங்க நேர்முகப் பரீட்சை ;

(ஆ) ஒரு இறுதி நேர்முகப் பரீட்சை :—

(i) தகைமைகாண் எழுத்துப் பரீட்சையில் (அரசாங்க சேவை அதிகார சபையால் கணிக்கப்பட்ட) ஒரு குறிப்பிட்ட தரத்தை அடையும் பரீட்சார்த்திகள் பூர்வாங்க நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) பூர்வாங்க நேர்முகப் பரீட்சையில் அவர்களின் திறமை, பதிவேடுகள் ஆகியவற்றிலிருந்து அரசாங்க சேவை அதிகார சபையால் இறுதி நேர்முகப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) இறுதியான திறமை ஒழுங்குப் பட்டியல் அரசாங்க சேவை அதிகார சபையால் இறுதி நேர்முகப் பரீட்சையில் கணிக்கப்படும். தெரிவு செய்யும்போது அரசாங்க சேவை அதிகார சபை பரீட்சார்த்தியின் பதிவேடுகள், புத்திசாதுரியம், குணம் தோற்றம், பொதுக் கல்வி, உண்டாயின் பின்பு பெற்ற பயிற்சியும் அனுபவமும், பொலிசு சேவைக்குத் தகுதி வாய்ந்தவரா என்பவற்றை ஆராய்ந்துபார்க்கும்.

ஒரு முடிவுக்கு வரும் பொருட்டு அவசியமெனக்கருதப்படின் ஆணையாளர்கள் தற்றுணிபுடன் ஒரு பரீட்சார்த்தியைத் தம்முன் இரண்டாவது தடவையாக பிரசன்னமாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளக்கூடும்.

7. (i) தகைமைகாண் எழுத்துப் பரீட்சைக்காய கட்டணம் ரூபா. 40 ஆகும். இத்தொகை பெறுமதியான முத்திரைகள் அதற்கென உள்ள கூட்டில் ஒட்டப்பட்டு, பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் அம் முத்திரையில் இடப்பட வேண்டும்.

(ii) பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.—(அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகளின் கையொப்பங்கள் அந்த அந்தத் திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர்களின் சார்பில் பதில் கடமையாற்ற அதிகாரமளிக்கப்பட்ட வேறு யாராவது உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்). மற்றையவர்களுடைய கையொப்பங்கள் உறுதிப்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட பின்வரும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.—சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரக்கிராசியார், பகிரங்க நொத்தரிஸ், அரசாங்க அல்லது பணிப்பாளர் முகாமையிலுள்ள பாடசாலைகளின் தலைவர்கள், கடற்படை, ஆகாயப்படை அல்லது தரைப்படையில் ஆணைபெற்ற உத்தியோகத்தர், ஆண்டொன்றுக்கு 2,400 ரூபா விற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர், புத்த கோவில் ஒன்றின் தலைமைக் குரு ; அல்லது பிற சமய நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள அல்லது முக்கிய நிலையிலுள்ள ஒரு குரு.

(ii) பரீட்சைக் கட்டணம் முழுதாகவோ ஒரு பகுதியோ திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

8. **அறிமுக அட்டைகள்.**—பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் தோற்றும் போது, பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். பின்வரும் சாதனங்களில் எவையேனும் இந்நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தலைமைத் தபாலதிபரினால் வழங்கப்பட்ட அறிமுக அட்டை ;

(ஆ) பரீட்சைத் தினத்திற்கு முன்னர் ; அதுவும் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்ட பெறுமதி வாய்ந்த ஒரு கடவுச் சீட்டு ;

(இ) மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப் பகுதியில் அரசாங்க திணைக்களமொன்றினால் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றினால், அல்லது சட்டபூர்வமான ஸ்தாபனமொன்றினால் வழங்கப்பட்ட, பரீட்சார்த்தியின் புகைப்படம் கொண்ட ஓர் அத்தாட்சிப் பத்திரம், அல்லது அனுமதிச் சீட்டு அல்லது வேறு ஏதாவதொரு தஸ்தாவேஜு.

9. **தவறான விபரங்களை சமர்ப்பித்தலுக்கான தண்டனை**—பரீட்சையின் பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவரென அறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அவரது பரீட்சார்த்தியாகுந் தன்மை ரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்த ஏதாவது விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பிழையெனக் கண்டால், அல்லது வேண்டுமென்றே ஏதாவது ஒரு முக்கிய காரணத்தை மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவர்.

10. தெரிவு செய்வதில் எந்தவிதமான ஆதரவு தேடுதலும், செல்வாக்குப் பிரயோகிக்க முயற்சித்தலும், அப்படியானபரீட்சார்த்தியைத் தகுதியற்றவராக்கும்.

11. **வைத்திய பரிசோதனை.**—தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் பொலிசு உத்தியோகத்தர்களாக இத்தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கேற்ற தேகாரோக்கியமுடையவர்களா என்று பார்க்கும்பொருட்டு வைத்திய பரிசோதனைக்கு உட்படவேண்டியிருப்பர். இவ்வைத்திய பரிசோதனையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் நியமிக்கப்படமாட்டார்கள்.

12. இவ்வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி 1, தொகுதி 2 இன் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
கொழும்பு 1, 1969 ம் ௵ ஏப்ரில் ௴ 9 ந் உ.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடத்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரசின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப் படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத் தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப் படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக் கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசிலனை செய்வதற்குட்பட்டதாகும்.

#### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தி யோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்து கொள்ள வேண்டும். பரீட் சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழு தும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல்வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவரா வர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்ற பரீட் சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத் துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களு டன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமை யுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற் பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத் திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்த னித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத் தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தி யின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளி வற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வே றெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத் துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக்கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப் படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந் தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்த கமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத் திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப் பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமையவேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலி யனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழு திய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடயங்களில் விடை யெழுதியிருந்தால் தேவை ப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்கு பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்தி ரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத் தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்த கம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்தி ருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றையோ கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலி யவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப் போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தக மோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறி ஞல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவார்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட் டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப் படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந் தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட் சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின் றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த் திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந் தோ உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்ட படி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக் காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடை யாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படு கின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல் லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப் படும்.

**பரீட்சார்த்திகளுக்கு :**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நா ளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங் குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும் அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உம்மைப் பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைககு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத் தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப் பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டங்கள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதிவிடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்படவேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினவுக்குரிய, இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள். கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் **(வலதுபக்க மேல் மூலையிலன்று)** உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல்வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

கே. ரீ. டபிளியு. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

5–476—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## தேர்வுப் பெறுபேறுகளும் தேர்வுகளும்

### மொறட்டுவை—கட்டுபெத்தையிலுள்ள இலங்கைத் தொழினுட்பவியற் கல்லூரியிற் சேர்தல்

### தொழினுட்ப வல்லுநர் பயிற்சிநெறி

மேற்படி பயிற்சிநெறி குறித்து விண்ணப்பங்கள் வரவழைக்கும் 1969 ஏப்பிரல் 18 ஆந் தேதிய 14,850 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி பகுதி I பிரிவு II இலுள்ள எனது அறிவித்தல் தொடர்பாக, மேலும் 2(அ) ஆம், 4 ஆம், 5 ஆம் பந்திகள் பற்றி உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

பந்தி 2(அ) பின்வருமாறு அமைதல் வேண்டும் :—
வயது : அபேட்சகர்கள் 1969 யனவரி 31 ஆந் தேதியன்று 16 வயதிற்குக் குறையாதவர்களாக இருத்தல் வேண்டும். எனினும், 20 வயதிற்குக் குறைந்தவர்களுக்குச் சலுகை காட்டப்படும்.

பந்தி 4 இல் பின்வரும் வசனம் சேர்க்கப்படல் வேண்டும் :
தனிப்பட்ட அபேட்சகர்கள் தாம் கடைசியாகப் படித்த பள்ளிக்கூடத்தின் முதல்வரினூடாகத் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பந்தி 5 :—கடைசி வசனங்கள் இரண்டும் பின்வருமாறு அமைதல் வேண்டும் :—

இரண்டாண்டுத் தொழினுட்ப வல்லுநர் பயிற்சிநெறியின் ஈற்றில், தொழினுட்பவியற் கல்லூரி, ஹாடி தொழினுட்பப் பயிற்சி நிறுவகம் ஆகிய இரண்டிலுமிருந்து ஏறத்தாழ 50 அபேட்சகர்கள் செயற்றிறனைப் பொறுத்து, எந்திரவியற் பட்டப் பயிற்சிநெறிக்குச் சமானமானதும் இலங்கைத் தொழினுட்பவியற் கல்லூரியில் நடாத்தப்படுவதுமான 5 ஆண்டுத் தொழினுட்பவியல் டிப்ளோமாப் பயிற்சிநெறியைப் பின்பற்றத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

எல். எச். சுமணதாச,
பணிப்பாளர்.

இலங்கைத் தொழினுட்பவியற் கல்லூரி,
கட்டுபெத்தை,
மொறட்டுவை.

5–382—15. 5. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## வன பரிபாலனப் பகுதி—மட்டக்களப்பு

### காடு வெட்டித் துப்பரவாக்குதல்

மட்டக்களப்பு கீழ் மாகாணப் பிரிவு வன உத்தியோகத்தரின் பகுதியில் (கோறளை) ஒதுக்கப்பட்ட காடு புனணையில் 200 ஏக்கர் காடு வெட்டி எரித்து மூங்கில் கன்றுகள் நாட்டத் துப்பரவாக்கிக் கொடுப்பதற்கு மட்டக்களப்பு மாவட்ட வன உத்தியோகத்தரால் 25.5.69 முற்பகல் 9.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இந்த இருநூறு ஏக்கரும் ஐம்பது, இருபத்தைந்து ஏக்கர் வீதம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கோரவிரும்பும் விண்ணப்பகாரர்கள் 25 ஏக்கருக்குக் குறைவில்லாமல் கேள்விப்பத்திரம் அனுப்ப வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்களை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "மாவட்ட வன அதிகாரி, மட்டக்களப்பு" என்று விலாசமிட்டு 1969 ம் ஆண்டு வைகாசி மாதம் 25 ந் திகதி முற்பகல் 9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையிலும் "கேள்விப்பத்திரம் மூங்கில் நடுவதற்கு 200 ஏக்கர் காடு வெட்டித் துப்பரவாக்குதல்" எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மட்டக்களப்புக் கச்சேரியில் ரூபா 25/– வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டினைக் காண்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. ஒப்பந்தம் கைச்சாத்திட்டவுடன் வேலை தொடங்கி, முழு வேலைகளும் மூன்று மாதங்களுக்கிடையில் முடித்து ஒப்படைக்கவேண்டும்.

5. இக் கேள்விகள் பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் மட்டக்களப்பு மாவட்ட வன உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. அருட்செல்வம்,
கீழ் மாகாண பிரிவு வன உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு.

வன பரிபாலன அலுவலகம்,
மட்டக்களப்பு, 4.5.69.

5–436—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## அரசாங்கக் கட்டுவேலைத் திணைக்களம்

புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான சர்வதேச வங்கியில் அங்கம் வகிக்கும் நாடுகளினும் சுவிற்சர்லாந்திலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து அல்லது முதல்வர்களிடமிருந்து அல்லது இலங்கையிலுள்ள அவர்களின் தத்துவம்பெற்ற பிரதிநிதிகளிடமிருந்து அரசாங்கக் கட்டுவேலைத் திணைக்களத்தின், பெருந்தெரு உப பிரிவுக்குப் பொறித் தொகுதி, சாதனங்கள், கருவிகள் என்பவற்றை வழங்கவும், ஒப்படைக்கவும் 1969, ஒகத்து 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரை கேள்விச் சபைத் தலைவரால், அரசாங்கக் கட்டுவேலை, அஞ்சல் தொலைச் செய்தித் தொடர்பு அமைச்சு, டிரான்ஸ்வோக்ஸ் ஹவுஸ், கொழும்பு என்ற முகவரியில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான சர்வதேச வங்கியின் அங்கத்துவ நாடுகளினும் சுவிற்சர்லாந்தினும் உற்பத்தி செய்யப்படும் சாதனங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டுமே கவனிக்கப்படும்.

பின்வருமிடங்களிற் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப் படியாகக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :—

(அ) பிரதி அதிபர், பெருந்தெரு உப பிரிவு அ. க. வே. தி. இவரிடமிருந்து சகல விபரங்களையும் செய்திகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான சர்வதேச வங்கியின் அங்கத்துவ நாடுகளினதும் சுவிற்சர்லாந்தினதும் உத்தியோக பூர்வமான இலங்கைப் பிரதிநிதிகளின் அலுவலகங்கள்.

(இ) புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான சர்வதேச வங்கியின் அங்கத்துவ நாடுகளினதும் சுவிற்சர்லாந்தினதும் உத்தியோக பூர்வமான தத்துவம் பெற்ற இலங்கை முகவர்களின் அலுவலகங்கள்.

250 ரூபா கட்டிப்பெற்ற கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு யூலை 31 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்குமுன் அ. க. வே. தி. பெருந்தெருப் பிரிவு பிரதி அதிபருக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் உள்ளூர் கேள்விக்காரருக்குக் கேள்விப்பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை கொழும்பு 1 இல் உள்ள அரசாங்கக் கட்டுவேலைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது கொழும்புக்குப் புறத்தே உள்ள கச்சேரி ஒன்றில் கொடுக்கலாம்.

சி. எம். பெரேரா,
அரசாங்கக் கட்டுவேலை அதிபதிக்காக.

அரசாங்கக் கட்டுவேலைத் திணைக்களம்,
கொழும்பு 1,
5.5.1969.

5–426—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்—யாழ்ப்பாண உப பிரிவு

கிளிநொச்சி நீர்ப்பாசன உப–பிரிவிலுள்ள கீழ்க்கூறப்பட்ட வேலைகளுக்கு வவுனியாவிலுள்ள வடபெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 2.6.69 திங்கட்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடன் திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | | பதிவு செய்யப்பட்ட தொகை | வேலைக்குத் தகுந்த கட்டணம் |
|---|---|---|---|
| (i) | அம்பலப்பெருமாள். குளத்தில் வலது கரை வாய்க்காலின் கீழ்கை வாய்க்கால் 10 லிருந்து 17 வரையும் கட்டுதல் .. | 34,000 .. | 50 |
| (ii) | திருவையாறு தூக்கு நீர்ப்பாசனத்திட்டத்திலுள்ள பாதைகளுக்கு கிறவல் போடுதல் .. | 25,000 .. | 25 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய வண்ணம் தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டும் இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கீழ்க்கூறப்பட்ட எல்லா நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் கந்தோரிலும் அலுவலக நேரங்களில் 28.5.69 பி. ப. 3.00 மணிவரைக்கும்பெற்றுக்கொள்ளலாம். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் வேலைக்கு மேற்கூறிய வாறு தகுந்த கட்டணம் கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக்கட்டணங்கள் ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விக்காகிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் கிளிநொச்சியிலுள்ள யாழ்ப்பாண உப–பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். யாழ்ப்பாணம்/மன்னர்/வவுனியா/முல்லைத்தீவு/வவுனிக்குளம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாண உப–பிரிவு.

கிளிநொச்சி, 22.4.1969.

5–334—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,.854

## காணிக் கொமிசனர் இலாகா

திருக்கோணமலை மாவட்டத்தில் கீழ்க்காணும் வேலைகளைச் செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் காணிக் கொமிசனர் இலாகாவின் கேள்விச் சபைத் தலைவரால் (த. பெ. இல. 500, கொழும்பு 1) 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதி பி. ப. 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | காரியாதிகாரியின் பிரிவு | தேவையான பதிவு ரூபா |
|---|---|---|
| அபயபுர பயிற்லைன் திருத்துதல் | நகரமும் சுற்றுடனும் | 16,000/— |

2. கேள்விப் பத்திரங்கள் 26.5.69 ந் திகதி பி. ப. 12.30 மணி வரை திருகோணமலைக் கச்சேரியில் விநியோகிக்கப்படும். அரசாங்கக் காரியாலயங்களில் மேலே கூறப்பட்ட தொகைகளுக்குப் பதிவு செய்யப்பட்டிருப்போருக்கு மட்டுமே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்களைப் பெறுமுன் திருகோணமலைக் கச்சேரியிலோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலோ அல்லது பொதுத்திறைசேரியிலோ ஒவ்வொரு வேலைகட்கும் ரூபா 100/— கேள்விக் கட்டணமாகக் கட்ட வேண்டும். இத்தொகை செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை காண்பித்த பின்னே கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். காசோலைகள், காசுக்கட்டளைகள், தபால் கட்டளைகள் ஆகிய ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

பதிவு செய்யப்பட்ட கிராமமுன்னேற்றச் சங்கங்களோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களோ அல்லது ப. நோ. கூ. சங்கங்களோ இவ்வேலைகட்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் இச்சங்கங்கள் நீர்ப்பாசன, கல்வி அல்லது பொதுவேலை இலாக்காக்களில் மேலே கூறப்பட்ட தொகைகட்கு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு கேள்விக் கட்டணம் தேவையில்லை. ஆனால் இச்சங்கங்கள் மேலே கூறப்பட்ட தொகைகட்கு பதிவுசெய்யப்பட்டிருப்பதாக அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விகள் முத்திரையிடப்பட்டு இருபிரதிகளாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்ட காகித உறையில் இடதுமேற்புறத்தில் குறித்த வேலையின் பெயரையும் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் குறிப்பிட வேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்பாவிடின், கொழும்பு 1, காலிமுகத்திடலில் உள்ள செயலாளர் அலுவலகத்தின் 357 ம் இலக்கம் கொண்ட அறையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் நேரில் இடவேண்டும்.

5. 1969.5.30 பி. ப. 2.30 மணிக்கு மேலே கூறப்பட்ட 357 ம் இலக்க அறையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது விரும்பினால் கேள்விக்காரரோ அவரின் பிரதிநிதிகளோ சமூகம் கொடுக்கலாம்.

6. சித்தியான கேள்விக்காரர் இலங்கைப் பிரஜைகளை மட்டுமே வேலைக்கு அமர்த்த வேண்டும்.

7. இதுசம்பந்தமாக ஏனைய விபரங்களை திருகோணமலை அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் (கச்சேரி) வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. ஏ. பெரேரா,
அரசாங்க அதிபருக்காக,
திருகோணமலை மாவட்டம்.

கச்சேரி,
திருகோணமலை,
6.5.1969.

5—435—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### மூதூர் இறங்கு துறையில் அலுவலகத்தையும், பண்டசாலையையும் கட்டுவதற்கென கேள்விகள்

மூதூர் இறங்கு துறையில் அலுவலகத்தையும், பண்டசாலையையும் கட்டுவதற்கென கேள்விப் பத்திரங்கள், பொது வேலைப் பகுதியில் பதிவு செய்துகொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, 1969 ஜூன் 5 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை கொழும்பு கப்பற்றுறைக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்வி பற்றிய நிபந்தனைகளையும், பிரசாதனங்களையும் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்திலும், சீனன்குடா, பர்மாகாம்பிலுள்ள வதிவு எஞ்சினியரின் காரியாலயத்திலும், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

3. கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப, ரூபா 100 ஐ கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்தி, கொழும்பு கப்பற்றுறை ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட படிவத்தில் கேள்விப் பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரப் படிவங்கள் 1969, ஜூன் 4 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

4. 1969 ஜூன் 5 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப் படுவார்கள்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969, மே 5.

5—381—15. 5. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## கட்டுநாயக்கா சர்வதேச விமானத்துறை நிலயத்தில் வரியற்ற பொருட்களின் வியாபார நிலயங்கள் நடாத்துவதற்குரிய சிறப்புரிமை

கீழ்க்காணும் வரியற்ற வியாபார நிலயங்களில் ஒன்றோ, பலவோ நடத்துவதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி முற்பகல் 10 மணிவரை சிவில் விமானப் போக்குவரத்து அதிபர், த. பெ. எண் 535, கொழும்பு 1, அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. மதுபானம், புகையிலை ஆகியவற்றின் வரியற்ற வியாபாரம், (குறைந்த பட்ச வாடகை மாதமொன்றுக்கு ரூபா 3,500).
2. ஆபரணங்கள், மாணிக்கக் கற்கள், கைக்கடிகாரங்கள் ஆகிய வைகளின் வரியற்ற வியாபாரம். (குறைந்த பட்ச வாடகை மாதமொன்றுக்கு ரூபா 1,500).
3. படம் பிடிக்கும் கருவிகள், வாசனைப் பொருட்கள் ஆகியனவற்றின் வரியற்ற வியாபாரம் (குறைந்த பட்ச வாடகை மாதமொன்றுக்கு ரூபா 2,000).
4. புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன (குறைந்த பட்ச வாடகை மாதமொன்றுக்கு ரூபா 125).

விமானத்துறை நிலயமோ அல்லது வியாபார நிலயமோ திறக்கப் படும் நாளில் இருந்து இரு வருடங்களுக்கு இந்தச் சிறப்புரிமை செல்லுபடியாகும்.

கேள்வியாளர்கள் குறிப்பிட்டுள்ள வியாபாரத்தில் குறைந்தது 5 ஆண்டு அனுபவமாவது உள்ளவர்களாக இருக்கவேண்டும். மேலும், சர்வதேச விமான நிலயங்களின் தகுதிக்கேற்ப வியாபார நிலயங்களை நடத்தக்கூடியவர்கள் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிபருக்கு நிரூபிக்கக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். (வெளிநாட்டு நாணயங்களில் ஈடுபடுபவர்கள் என்பதற்குரிய நாணயமாற்று அதிகாரியின் அங்கீகாரமும் இதற்குள் அடங்கும்).

சிவில் விமானப் போக்குவரத்து அதிபரின் அலுவலகத்திலோ, அல்லது கொழும்புக்கு அப்பாலுள்ள கச்சேரிகளிலோ, கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 50 செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுச் சமர்ப்பிப்பதன் மூலம், 1969 ம் ஆண்டு மே மாதம் 27 ந் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் சிவில் விமானப் போக்குவரத்து அதிபரிடமிருந்து பெறக்கூடியதான படிவங்களிலேயே (இருபிரதிகளில்) கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

வேறு விபரங்கள் சிவில் விமானப் போக்குவரத்து அதிபர் அவர்களின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. ல. பி. த மெல்,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபர்.

த. பெ. எண் 535,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
1969, மே

5—423—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## சுகாதார திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள் பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச் சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்களை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விருக்கும் சுகாதார சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருனாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுபணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டியமுறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பத்திவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புகொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவதுபத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாக திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விச் காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டு " பி " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச்செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்டகாலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச் சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

13. **அரிசி.**—நோயாளிகளாலும், வேலையாட்களினாலும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவிப் பண விகிதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலையத்தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்த காரருக்கு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு மே மீ 3 ந் வ.

எஸ். இராசரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| (1) தாபனங்கள் | (2) கேள்விக் கட்டுப் பணம் | (3) பிணை வைப்புப் பணம் | (4) கேள்விகள் மூடப்படும் திகதி | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
| | ரூபா | ரூபா | | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி |
| நெடுந்தீவு அ. வை. சா. | 100 | 800 | | 400 | — | 200 | 900 | 800 | — | 400 | 1,500 |
| புங்குடுதீவு அ. வை. சா. | 100 | 600 | | 400 | — | 800 | 1,600 | 400 | — | 800 | 1,700 |
| பளை இ. அ. வை. | 100 | 600 | | 500 | — | 1,000 | 2,000 | 700 | — | 1,300 | 2,700 |
| சங்கானை அ. வை. | 100 | 600 | | 800 | — | 400 | 1,800 | 1,300 | — | 700 | 2,700 |
| கோப்பாய் அ. வை. | 100 | 600 | | 300 | — | 600 | 1,300 | 1,000 | — | 1,800 | 3,800 |
| பூனகரி இ. அ. வை. | 100 | 600 | | 400 | — | 800 | 1,600 | 600 | — | 1,100 | 2,400 |
| பண்டத்தரிப்பு இ. வை./ பி. வி. | 100 | 400 | 11.6.69 | 300 | — | 600 | 1,200 | 400 | — | 800 | 1,600 |
| வட்டுக்கோட்டை இ. வை. | 100 | 800 | | 400 | — | 700 | 1,500 | 1,500 | — | 3,000 | 6,000 |
| செம்பியன்பற்று இ. வை. | 100 | 600 | | 300 | — | 600 | 1,200 | 500 | — | 1,200 | 2,200 |
| அச்சுவேலி இ. வை. | 100 | 600 | | 600 | — | 700 | 1,800 | 700 | — | 1,300 | 2,600 |
| மல்லாவி. அ. வை. | 100 | 600 | | 300 | — | 600 | 1,100 | 500 | — | 1,100 | 2,200 |
| நயினாதீவு அ. வை. | 100 | 600 | | 500 | — | 900 | 1,900 | 400 | — | 900 | 1,700 |

5-383—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

**கழிக்கப்பட்ட, உபயோகித்த என்சின்களின் விற்பனவுகள் விற்றுத் தீர்க்கும் வளவு, வெரகெரை**

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள விற்றுத் தீர்க்கும், இ. போ. ச. வளவில் இருந்து கழிக்கப்பட்ட, உபயோகித்த எஞ்சின்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார். என்சின்கள் பின்வரும் இனங்களைக் கொண்டவை :—

பெட்போட், பேர்க்கின்ஸ், கை, ஏ.ஈ.சி., லெயிலண்ட், இன்டர்நாசனல், காட்னர், டொட்ஜ், போட் வீ8, கொமேர்சல், எம்/கொமேர்சல், செவ்றலே ஆகியன.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதியில் நண்பகல் 12.00 மணிவரை கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம விநியோக உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணங் களாக ரூபா 100 வீதம் காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்குமுன் எனது அலுவலகத்தில் காட்ட வேண்டும்.

**கேள்விகள் 5.6.1969 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு முடிவடையும்.**

வெரகெரை, இ. போ. ச. விற்றுத் தீர்க்கும் வளவில் வழமையான அலுவலக நேரங்களில் எஞ்சின்களைப் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி, கொழும்பு 5,

5–416—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## இலங்கை அரச விமானப் படை

1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிவரை கீழ்க்காணும் பொருட்களை விநியோகஞ் சேவை செய்வதற்கு மெழுகிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இக்கேள்விகள் இதன் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு பாசன் வீதியிலுள்ள விமானப்படைத் தலைமை நிலையத்திலிருக்கும் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (1) விநியோகஞ்/சேவை | (2) கேள்வி முடிவடையும் திகதி | (3) கேள்விப்படிவங்கள் கொடுக்கப்படும் இறுதி நாள் |
|---|---|---|
| 1. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப் படையினர்க்கு மரக்கறி, தேங்காய், பண்ணைப் பிரயோசனங்களை விநியோகித்தல் .. .. .. .. | 5.6.69 .. | 4.6.69 |
| 2. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப் படையினர்க்கு இறைச்சி விநியோகித்தல் .. | 5.6.69 .. | 4.6.69 |
| 3. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப் படையினர்க்கு தேசிய காலை உணவு வகைகள் விநியோகித்தல் .. .. .. .. | 10.6.69 .. | 9.6.69 |
| 4. தியத்தலாவையிலுள்ள இலங்கை அரச விமானப் படையினர்க்கு தேசிய காலை உணவு வகைகள் பாண் விநியோகித்தல் .. .. .. .. | 10.6.69 .. | 9.6.69 |
| 5. கொழும்பு, கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத்துணிகள் சலவை செய்தல் .. .. .. | 11.6.69 .. | 10.6.69 |
| 6. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படை ஆசுபத்திரியின் மருத்துவத் துணிகளைச் சலவை செய்தல் .. .. .. .. | 11.6.69 .. | 10.6.69 |
| 7. கட்டுநாயக்கா, தியத்தலாவை, சீனன்குடா ஆகியவிடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் மெத்தைகள், தலையணைகள், இருக்கைகள் புதுக்கியமைத்தல் .. .. | 12.6.69 .. | 11.6.69 |
| 8. கொழும்பு கட்டுநாயக்கா, தியத்தலாவை, சீனன்குடா ஆகியவிடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் உத்தியோக உடைகள், மெத்தை விரிப்புகள், கூடாரங்கள் முதலியன பழுது பார்த்து திருத்தியமைத்தல் .. .. .. .. | 12.6.69 .. | 11.6.69 |
| 9. கட்டுநாயக்கா, தியத்தலாவை, சீனன்குடா ஆகிய இடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் பாதணிகள் பழுதுபார்த்துக் கொடுத்தல் .. .. .. | 12.6.69 .. | 11.6.69 |

திருப்பிக்கொடுக்கப்படும் கேள்விக் கட்டுப்பணம் ரூபா 75 ஐ தனித்தனி ஒவ்வொரு விநியோகம்/சேவைக்கு கொழும்பு பாசன் வீதியிலுள்ள விமானப்படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டிய பின்னரே கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும். மேற்கூறப்பட்ட விநியோக/சேவைக்கான கேள்விப்படிவங்கள் மேலே 3 ம் நிரையில் குறிக்கப்பட்ட திகதிகளில் நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கொழும்பு பாசன் வீதியிலுள்ள விமானப்படைத்தலைமை நிலையத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. ஆர். அமரசேகரா,
எயர் உவைச் மார்ஷல்,
விமானப்படைத் தலைவர்.

5–335—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**அனுராதபுர உப பிரிவு**

அனுராதபுர உப பிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் வட மத்திய பிரிவு பெரும் பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 2 ந் திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாக திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| (1) மஹாவிலச்சி இடது கரை பேர்வாய்க்கால் தெரு திருத்தும் வேலைகளுக்கு 2" கல்லும் ¾" சல்லியும், விநியோகித்தலும் அடுக்குதலும்—0–3 மைல் | 54,000 .. | 100 |
| (2) மஹாவிலச்சி வலதுகரை பேர்வாய்க்கால் தெருவும் (0மைல் 24சங்கிலி–1 மைல் 11சங்.) பேமடுவ சந்தியில் இருந்து வலதுகரை பேர்வாய்க்கால் தெருவை 1 மைல் 11சங்கிலியில் சந்திக்கும் தெருவும், வலதுகரை பேர்வாய்க்கால் தெருவை 1 மைல் 11சங்கிலியில் இருந்து 4மைல் 32சங்கிலியில் தொடுக்கும் தெருவும் திருத்த வேலைகளுக்கு 2"கல்லும் ¾"சல்லியும், விநியோகித்தலும் அடுக்குதலும் | 51,000 .. | 100 |
| (3) மஹாவிலச்சி வலதுகரை பேர்வாய்க்கால் தெரு (4மைல் 32சங்கிலியில் இருந்து 7மைல் 32சங்கிலி வரைக்கும்,—3மைல்) திருத்தும் வேலைகளுக்கு 2"கல்லும் ¾"சல்லியும் விநியோகித்தலும் அடுக்குதலும் | 54,000 .. | 100 |

2. நீர்ப்பாசன திணைக்களத்தின் மேற்கூறிய தொகைகளுக்குக் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அபி விருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதி யுடையவர் ஆவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் அனுராதபுரம் மஹாகனதராவ, பதவிய, ராஜாங்கன ஆகிய நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில் வைகாசி மாதம் 28 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக் களத்தின் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப் பத்திரங் களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்களை வழங்கு முன் கேள்வி கட்டணங்களால் மேற்கூறிய தொகையை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசன கந்தோரில் அல்லது ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்களை அனுராதபுர நீர்ப்பாசன உப பிரிவுக் கந்தோ ரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டப்ளிவு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அனுராதபுர உப பிரிவு.

அனுராதபுரம்,
1969, சித்திரை 28 ந் திகதி.

5–333—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

---

## சுகாதாரத் திணைக்களம்—யாழ்ப்பாணப் பிரிவு

### அழுக்குத்துணி சலவை செய்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ந் திகதி (இருநாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் முதலாம் பந்தியிலுள்ள தாபனங்களுக்கு அழுக்குத்துணி சலவை செய்வதற்கான முத்திரை பொறிக்கப்பட்ட வெவ்வேறு கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் தாபனங்களிடமிருந்து யாழ்ப்பாண சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. **(i) கேள்விக்கட்டுப் பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 2வது பந்தியில் குறிக்கப்படும் வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

**(ii) கேள்விப் பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் பகல் 12 மணிக்கு முன்பாக இவ்வலுவல கத்திலும், அல்லது

| | | |
|---|---|---|
| அனுராதபுரம் | களுத்துறை | மாத்தறை |
| பதுளை | கண்டி | புத்தளம் |
| மட்டக்களப்பு | கேகாலை | இரத்தினபுரி |
| கொழும்பு | குருநாகல் | வவுனியா |
| காலி | மாத்தளை | |

ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் கொடுக்கப்படும். குறித்த பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களைத் தபால் மூலம் பெறுதற்கு தகுதியுள்ள கேள்விக்காரர்கள், கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு ஏற்றதாக நேரகாலத்தோடு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுக்குடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **சலவை செய்ய வேண்டிய துண்டுகளின் விபரங்கள்.**—மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய துண்டுகளின் உத்தேசத் தொகை விபரங் கள் கீழ்க்காணும் அட்டவணையின் 5 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக்கொண்ட உறையின் இடதுபக்கத் தின் மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்த அலுவலகத்திலி ருக்கும் கேள்விப் பெட்டிக்குள் பொடலாம் அல்லது என்னிடமோ அல்லது செயலாளர்/கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவர்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 6 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள் விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை துனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள் வியின் இணைப்படியை நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலை யையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப்பணம்.**—கேள்விகள் ஒப்புக்கொள்ளப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் இங்கு தரப் பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் தரப்பட்டிருக்கும் பிணைவைப்புப்பணத்தைச் செலுத்திய பின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **வேறு விபரங்கள்.**—(i) களஞ்சிய அறை, மின்சாரம், நீர் ஏனைய வசதிகள்.—களஞ்சிய அறை, மின்சாரம், நீர் ஏனைய வசதிகள் பெறப் படின் அச்சலுகைகளுக்கான செலவை அவ்வூர் பெரும்பாக இறைவரி அதிகாரியினால் கணிக்கப்பட்ட விகிதப்படி மாதாந்தம் ஒப்பந்தக்காரரின் மாதாந்த உறுதிச்சீட்டிலிருந்து அறவிடப்படும்.

**(ii) அழுக்குத்துணிகளை கிருமிநாசினி செய்யவேண்டியதற்கான போக்குவரத்துக் கட்டணம்.**—அழுக்குத்துணிகளை சலவை செய்யுமுன் கிருமிநாசினி செய்யவேண்டி நேரிடின் தாபனங்களிலிருந்து கிருமிநாசினி நிலையத்திற்கு எடுத்துக்கொண்டு திரும்பக் கொண்டு வருவதற்கான போக்கு வரத்துக்கட்டணம் கொடுபடமாட்டா.

**(iii) உள்ளூராட்சிப் பகுதியிலுள்ள நிலையங்களுக்கான கேள்விப்பத்திரங்கள்.**—உள்ளூராட்சி நிலையங்களுக்கான கேள்விகளை அவ்வுள்ளூராட்சி விதிகளுக்கு—ஏதும் உண்டானால்—அமையச் சலவைச்சாலைகள் நடாத்துபவர்களே விண்ணப்பிக்கலாம்.

(iv) கேள்விக்காரர்கள் விரும்பினால் ஒரு பகுதிக்கு அல்லது எல்லாப் பகுதிகளுக்கும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம், ஆனால் குறிக்கப்பட்ட தொகையைக் கட்டுப்பணமாக கேள்விப்பத்திரம் அனுப்பும் ஒவ்வொரு பகுதிக்கும் செலுத்தவேண்டும்.

சி. இராசரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

குறித்த அட்டவணை

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| தாபனம் | கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் | பிணைவைப்புப் பணம் | மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய தடவைகள் | மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய துணிகளின் சராசரித்தொகை | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் |
| | ரூபா | ரூபா | | | |
| **அரசினர் வைத்தியசாலை, காங்கேசன்துறை :** | | | | | |
| பிரிவு 1—ஆண்கள் (வைத்திய சிகிச்சைக் களம்) பெண்கள் (வைத்திய சிகிச்சைக் களம்) வெளி நோயாளர் பகுதி, எக்ஸ் கதிர்ப் பகுதி, ஆய்வுகூடம், பிரசவ சிகிச்சைக்களம், சத்திர சிகிச்சை மண்டபம், சமையலறை, பல் வைத்திய கூடம், தாதிமார் விடுதி, ஆண்கள் மனநோய் சிகிச்சைக்களம், பெண்கள் மனநோய் சிகிச்சைக்களம் .. | 50 .. | 100 .. | 4 .. | 2,200 | 5.6.69 மு. ப. 10 மணி |
| பிரிவு 2—சிகிச்சைக்களம் 1, (ஆண்கள் கயரோக சிகிச்சைக் களம்) .. | 50 .. | 100 .. | 4 .. | 1,200 | |
| **அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் :** | | | | | |
| பிரிவு 1—சிகிச்சைக்களங்கள் 1, 2 (பிரசவ சிகிச்சை), 11, 15 (குழந்தைகள் சிகிச்சை) .. | 50 .. | 100 .. | 15 .. | 23,000 | |
| பிரிவு 2—சிகிச்சைக் களங்கள் 3 (ஆண்கள் சத்திர சிகிச்சை), 4 (பெண்கள் சத்திர சிகிச்சை), 5 (கர்ப்பச் சிகிச்சை), 6 (பெண்கள் வைத்திய சிகிச்சை) .. | 50 .. | 100 .. | 4 .. | 8,600 | |
| பிரிவு 3—சிகிச்சைக் களங்கள் 10 (ஆண்கள் சத்திர சிகிச்சை), 12 (பெண்கள் சத்திர சிகிச்சை), 14 (ஆண்கள் வைத்திய சிகிச்சை), ஆய்வுகூடம், எக்ஸ் கதிர் பகுதி, உள நோயாளர் மருந்தகம், இரத்தவங்கி, வெளி நோயாளர் மருந்தகம், உடுப்பறை .. | 50 .. | 100 .. | 4 .. | 12,000 | |
| பிரிவு 4—சத்திர சிகிச்சை மண்டபம் .. | 50 .. | 100 .. | 15 .. | 11,220 | |
| பிரிவு 5— சிகிச்சைக் களங்கள் 7 (பணம் செலுத்தி சிகிச்சை பெறுதல்), 8 (முறிவு நெரிவு), 9 (ஆண்கள் சத்திரசிகிச்சை), 16 (இருதயநோய்) .. | 50 .. | 100 .. | 4 .. | 7,100 | |

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

7-438—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854.

# ஆய விற்பனையும், குத்தகை விற்பனையும்

## வவுனியா மாவட்டத்தில் கள்ளுத் தவறணை குத்தகை மறு விற்பனை—1.7.69 தொடக்கம் 30.6.70 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணைகளில் 1.7.69 தொடக்கம் 30.6.70 வரைக்குமான கால எல்லைவரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும், பிரசுரிக்கப்பட்ட 14,846 ம் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் " வவுனியா மாவட்ட கள்ளுக்குத்தகை, 1969/70 " என்று குறிப்பிட்டு 1969 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதி கீழே காட்டப்பட்டிருக்கும் நேர அட்டவணைப்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும் எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்பமுடியாது.

4. கேள்விக்காரர்—

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அந்தப்பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில்,

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்திற்கு குறைந்தால், அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்வியாளர் அதேவேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்குக் கேள்விப் பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்காலம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்.)

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கலாம் அல்லது வவுனியா கச்சேரியில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினும் போடலாம். ஆனுல் கேள்விப்பத்திரம் எந்த தவறணைக்கு தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என் வலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரிப் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினுல் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தை தவறணைக்காக தெரிவுசெய்யப்படுகிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். வவுனியா 7 ம் இலக்க கள்ளுத்தவறணை தற்பொழுது இருக்கும் அதே இடத்தில் இவ்வருடம் இருக்கமாட்டாது.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவிரும்பின் வவுனியா கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேற் கூறப்பட்ட அட்டவணை**

வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணைகள் மறுவிற்பனை (1.7.69/30.6.70)

| இலக்கமும் இடமும் | | தவறணைகளின் உள்ளூர்ப்பகுதி | விற்பனைத் திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு பட்டின சபை எல்லைக்குள் | 2.6.69 | காலை 9.30 |
| 3. | முள்ளியவளை | முள்ளியவளை கிராமச் சபை எல்லைக்குள் | 2.6.69 | காலை 9.40 |
| 4. | புதுக்குடியிருப்பு | புதுக்குடியிருப்பு கிராமச் சபை எல்லைக்குள் | 2.6.69 | காலை 9.50 |
| 5. | புதுமாத்தலன் | புதுமாத்தலன் கிராம எல்லைக்குள் | 2.6.69 | காலை 10.00 |
| 7. | வவுனியா | வவுனியா நகர சபை எல்லைக்குள் | 2.6.69 | காலை 10.10 |
| 9. | வட்டுவாக்கல் | வட்டுவாக்கல் கிராம எல்லைக்குள் | 2.6.69 | காலை 10.20 |

பி. சி. பெரேரா,
அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டம்.

வவுனியாக்கச்சேரி,
1969 ம் ஆண்டு வைகாசி மீ 5 ந வ.

5–400—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854.

---

## மன்னார் மாவட்ட கள்ளுத் தவறணைக் குத்தகை 1.7.69 தொடக்கம் 30.6.70 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட மன்னார் மாவட்டக் கள்ளுத் தவறணைகளில் 1.7.69 தொடக்கம் 30.6.70 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக விற்பனை செய்வதன்பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 21.3.69 ந் தேதி பிரசுரிக்கப்பட்ட 14,846 இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் "மன்னார் மாவட்டக் கள்ளுக்குத்தகை 1969/70" என்று குறிப்பிடப்பட்டு, அட்டவணையில் காட்டப்பட்ட நேரத்திற்குப் பிந்தாமல் 26.5.69 ந் திகதியன்றோ அல்லது அதற்குமுன்னதாகவோ வந்து சேரக்கூடியதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித் தனித் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படவேண்டும். எவரும், எந்தவொரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்துபேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்தவொரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்ப முடியாது.

4. கேள்விக்காரர் :—

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப் பகுதியில் அவருடைய காணியிருக்கிறதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிட்டால் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்துக்குக் குறைந்தால் ;

அவரது கேள்விப்பத்திரம் கவனத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்கு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர், அதேவேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப் பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப் பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது மன்னார் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப்பெட்டியிலும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து, மேற்காட்டிய குறிப்புக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. கீழே சொல்லப்பட்ட ஒவ்வொரு தவறணைக்கும் எதிராகவுள்ள வைப்புப் பணத்தைக் கேள்விக்காரர் செலுத்துதல் வேண்டும் :—

(அ) மன்னார் கச்சேரியிலோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலாவது வைப்புப் பணத்தைச் செலுத்தலாம். வைப்புப் பணத்திற்குரிய பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும் ;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விச்காரர், விற்பனை நிபந்தனைகளில் உடனடியாகக் கைச்சாத்திடத் தவறினால், அவரது வைப்புப் பணம் பறிமுதல் செய்யப்படும்.

(இ) தெரிவு செய்யப்படாத கேள்விக்காரர்களின் வைப்புப்பணம், தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் திருப்பிக்கொடுக்கப்படும்.

7. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ மன்னார் அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுப்பதற்கும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தைத் தவறணைக்காகத் தெரிவு செய்யப்படுகிறாரென்பதை மன்னார் அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் மன்னார் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளவும்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

(மன்னார் மாவட்ட கள்ளுத் தவறணைகள் 1.7.69–30.6.70)

| தொடர் இல. | பிரிவு | தவறணைக்காகத் தெரிவு செய்யப்படும் உள்ளூர்ப் பகுதி | வைப்புப் பணத் தொகை | கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் நேரமும் தேதியும் |
|---|---|---|---|---|
| 1. | மன்னார் | மன்னார் | 2,000 | 26.5.69 மு. ப. 10.00 |
| 2. | மன்னார் | தலைமன்னார் | 1,500 | 26.5.69 மு. ப. 10.15 |
| 3. | மன்னார் | பேசாலை | 1,500 | 26.5.69 மு. ப. 10.30 |
| 4. | மன்னார் | உயிலங்குளம் | 1,500 | 26.5.69 மு. ப. 10.45 |
| 5. | மாந்தை | கட்டாடிவயல் | 500 | 26.5.69 மு. ப. 11.00 |
| 6. | முசலி | வங்காலை | 1,000 | 26.5.69 மு. ப. 11.15 |
| 7. | முசலி | அரிப்பு | 1,000 | 26.5.69 மு. ப. 11.30 |
| 8. | மன்னார் | மாலுவாடி | 1,500 | 26.5.69 மு. ப. 11.45 |

அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

மன்னார்க் கச்சேரி,
1969 ம் ஆண்டு மே மீ 4 ந வ.

5–384—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

# நானாவித அறிவித்தல்கள்

## ஆயுர்வேத வைத்திய சபை

### ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்தல்

ஆயுர்வேத வைத்திய சபையானது, 1961 ம் ஆண்டு 31 ம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 55 (1) (e) பிரிவின்படி, ஆயுர்வேத வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தினை 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதி எனத் தீர்மானித்துள்ளது.

பொது வைத்தியர்களாகவும், விசேட வைத்தியப் பிரிவுகளாகிய முறிவுகளும் விலகலும், கட்டுகளும் புண்களும், சிறுபிள்ளை ரோகங்கள், கர்ப்பிணி, சூதிகாரோக, கண் நோய்கள், மூலவியாதிகள், சர்ம ரோகங்களுக்குப் பதிவு செய்யும் விண்ணப்பதாரிகள், 31.12.1952 ல் 10 வருடத்திற்கு குறையாத அனுபவத் தேர்வு பெற்றிருப்பவர்களாகவும், வைத்தியம் செய்யத் தொடங்கிய வருடம் 23 வயதினைப் பூர்த்தியடைந்தவரென தகுந்த ஆதாரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும். 1.10.1962 ல் 10 வருட அனுபவத் தேர்வினைப் பூர்த்தியடைந்தவர்களும், பூர்த்தியடையாதவர்களும் ஒரு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விசேட வைத்தியப் பிரிவில் விஷ வைத்தியர்களாகப் பதிவு செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு மேற்கூறிய அனுபவச் சார்பான விதி அமையும். 31.12.1952 ல் 10 வருடத்திற்கு குறையாத அனுபவத் தேர்வும், விஷ வைத்தியம் செய்யத் தொடங்கிய வருடம் 18 வயதினைப் பூர்த்தி செய்தவராய் உள்ளவரெனத் தகுந்த ஆதாரங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

வைத்திய சபையின் முத்திரை பொறிக்கப்பட்ட அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களும், பாடத்திட்டங்களும் ஒவ்வொன்றும் ஒரு ரூபாய் கொடுத்து இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது அதற்குரிய தொகையினை காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளை மூலமாகப் பதிவு செய்யப்பட்ட கடித மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

டி. எச். எதிரிசிங்க,
பதிவாளர்,
ஆயுர்வேத வைத்திய சபை.

325, கொட்டா ரோட்,
கொழும்பு 8. 29.4.1969.

5–350—15.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,854

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகனி வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|
| சனவரி .. | 3.1.69 வெள்ளி .. | 24.12.68 செவ்வாய் பி. ப. 3.30 |
| | 9.1.69 வியாழன் .. | 3. 1.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 16.1.69 வியாழன் .. | 9. 1.69 வியாழன் ந. ப. 12.00 |
| | 24.1.69 வெள்ளி .. | 16. 1.69 வியாழன் ந. ப. 12.00 |
| | 31.1.69 வெள்ளி .. | 24. 1.69 வெள்ளி ந. ப. 12.00 |
| பெப்புருவரி .. | 7.2.69 வெள்ளி .. | 31. 1.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | 14.2.69 வெள்ளி .. | 7. 2.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 21.2.69 வெள்ளி .. | 14. 2.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 27.2.69 வியாழன் .. | 20. 2.69 வியாழன் பி. ப. 3.30 |
| மாச்சு .. | 7.3.69 வெள்ளி .. | 27. 2.69 வியாழன் பி. ப. 3.30 |
| | 14.3.69 வெள்ளி .. | 7. 3.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 21.3.69 வெள்ளி .. | 14. 3.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 28.3.69 வெள்ளி .. | 21. 3.69 வெள்ளி பி. ப. 3.30 |
| ஏப்பிறல் .. | 3.4.69 வியாழன் .. | 27. 3.69 வியாழன் பி. ப. 3.30 |
| | 11.4.69 வெள்ளி . | 31. 3.69 திங்கள் பி. ப. 3.30 |
| | 18.4.69 வெள்ளி .. | 8. 4.69 செவ்வாய் ந. ப. 12.00 |
| | 25.4.69 வெள்ளி .. | 18. 4.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 30.4.69 புதன் .. | 23. 4.69 வியாழன் ந. ப. 12.00 |
| மே .. | 9.5.69 வெள்ளி .. | 30. 4.69 புதன் பி. ப. 3.30 |
| | 15.5.69 வியாழன் .. | 9. 5.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | 22.5.69 வியாழன் .. | 15. 5.69 வியாழன் ந. ப. 12.00 |
| | 30.5.69 வெள்ளி .. | 22. 5.69 வியாழன் ந. ப. 12.00 |
| யூன் .. | 6.6.69 வெள்ளி .. | 30. 5.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | 13.6.69 வெள்ளி .. | 6. 6.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | 20.6.69 வெள்ளி .. | 13. 6.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | 27.6.69 வெள்ளி .. | 20. 6.69 வெள்ளி பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ௵ திசெம்பர் ௴ 20 ந ௳.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகனி.